# கூத்தைப் போட்டிக்காக வடிவமைத்தலும் எதிர்கொள்ளும் சவால்களும்

## *Challenges in designing Kooththu for competition*

*Dr. Sundaralingam Chandrakumar,*[1]

https://orcid.org/0000-0003-0774-9666. chandrakumars@esn.ac.lk.

***Abstract***

The Sri Lankan Tamil traditional *Kooththu* is a performing art form that is part of the cultural heritage. It is a community theatre that includes story-based dances and songs, and a platform for collective action, celebration, and enjoyment. Designing this *Kooththu* with rules for competition poses many challenges. In a competitive environment, *Kooththu* artists face many crises and challenges, such as discontent among *Kooththu* artists, loss of tradition, degradation of performance quality, presence of government officials or leaders of organizations other than *Kooththu* artists, exclusion of *Kooththu* artists, strengthening of the dominance of colonial modern knowledge, becoming a commodity created for the needs of financial institutions, disruption of social cohesion, and the belief that this is *Kooththu* by the younger generation. It is important to bring this into the conversation. Because *Kooththu* is capable of fulfilling individual and social needs and is worthy of celebrating the potential and expertise of *Kooththu* artists. This is to help the human being who is stuck in today's modern world to live happily. Therefore, it is necessary to strengthen the *kooththu* in that environment. Research Problem Since the *kooththu* is designed for competition in a way that changes its aesthetics, inappropriate challenges arise in the *kooththu* and society. The purpose of the research is to identify the challenges that arise in the aesthetics and the riverbed of the *kooththu* as the *kooththu* is designed for competition. As a research methodology, this study uses a explorative research approach in qualitative design. To carry out this research, participating in *kooththu* competitions as a referee and observing, conducting field visits, interviews, discussions, etc. are used as primary tools, and related writings, website videos are used as secondary tools. When cultural departments, schools, etc. request the design of koothu in the village according to the competition conditions, many traditionally performed *kooththu* are re-produced by *kooththu* artists and their enthusiasts with time-lapses. The *kooththu* performers that were prepared and taken for the competition have been used as the main models.

**Keywords:** *Kooththu competition, Kooththu Artist, tradition, dominance of modern knowledge, social Theatre.*

**ஆய்வுச் சுருக்கம்**

*இலங்கைத் தமிழ் பாரம்பரியக் கூத்து பண்பாட்டு மரபுரிமையாக விளங்கும் நிகழ்த்துகைக் கலையாகும். இது கதை தழுவிய ஆடல், பாடல்களைக் கொண்டதும், கூட்டாகச் செய்து செயற்பட்டு கொண்டாடி மகிழக்கூடிய களத்தைக் கொண்டதுமான சமுதாய அரங்காகும். இக்கூத்தைப் போட்டிக்கான விதிமுறைகளுடன் வடிவமைப்பதால் பல சவால்கள் ஏற்படுகின்றன. போட்டிச் சூழலில் கூத்தர்களிடம் மனச்சஞ்சலம் ஏற்படல், பாரம்பரியத்தின் ஆட்டம், பாட்டுத் தரமற்றுப் போதல், கூத்தர் தவிர்ந்த அரச*

*1 Senior Lecturer, Department of Fine Arts, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.*

*உத்தியோகத்தர் அல்லது கழகத் தலைவர்கள் முன்னிலை வகித்தல், கூத்தர் புறந்தள்ளப்படல், காலனிய நவீன அறிவின் ஆதிக்கம் வலுப்பெறுதல், நிதி நிறுவனங்களின் தேவைக்காக உருவாக்கப்படும் விற்பனைப் பண்டமாகுதல், சமுதாய இணைவு பாதிக்கப்படல், இளம் தலைமுறையினர் இதுவே கூத்து என்று நம்புதல் எனப் பல நெருக்கடிகளையும் சவால்களையும் எதிர்கொள்கின்றது. இதனை உரையாடலுக்குக் கொண்டுவருவது முக்கியமானதாகும். ஏனெனில், கூத்து தனிமனித, சமுதாயத் தேவைகளை நிறைவேற்ற வல்லதும் கூத்தரின் ஆற்றல், திறன் நிபுணத்துவங்களைக் கொண்டாடுதலுக்குரியதும் ஆகும். இது இன்றைய நவீன உலகில் சிக்கித்தவிக்கும் மானிடரை மகிழ்ந்து வாழ வைக்க உதவுவது. ஆகவே, கூத்தை அந்தச் சூழலில் நின்று வலுப்படுத்துவது அவசியம். ஆய்வுப் பிரச்சினை கூத்தை அதன் அழகியலில் மாற்றம் ஏற்படும் வண்ணம் போட்டிக்கு வடிவமைப்பதால் கூத்திலும், சமூகத்திலும் பொருத்தமற்ற சவால்கள் ஏற்படுகின்றன. ஆய்வு நோக்கம்: போட்டிக்காகக் கூத்தை வடிவமைப்பதால் அழகியலிலும், ஆற்றுநரிடமும் ஏற்படும் சவால்களைக் கண்டறிதல். ஆய்வு முறையியல்: இவ்வாய்வில் பண்புசார் வடிவமைப்பில் விளக்கமுறை ஆய்வு அணுகுமுறை கையாளப்படுகின்றது. இவ்வாய்வினை முன்னெடுப்பதற்கு கூத்துப் போட்டிகளில் நடுவராகக் கலந்து கொண்டு அவதானித்தல், களப் பயணம் மேற்கொள்ளல், நேர்கணால், கலந்துரையாடல் போன்றன முதன்மைக் கருவியாகவும், இது தொடர்பான எழுத்துக்கள், இணையத்தள காணொலிகள் இரண்டாம் நிலைக் கருவியாகவும் பயன்படுத்தப்படுகின்றது. கலாசார திணைக்களங்கள், பாடசாலைகள் போன்றவற்றால் ஊருக்குள் கூத்துக்களைப் போட்டி நிபந்தனைக்கு அமைய வடிவமைத்து கோரிய பொழுது கூத்தர்களாலும், அதன் ஆர்வலர்களாலும் பல பாரம்பரியமாக ஆடப்பட்ட கூத்துக்கள் மீள கால நேரச் சுருக்கங்களுடன் தயாரிக்கப்படுகின்றன. இவ்வாறு தயாரித்து போட்டிக்காகக் கொண்டுசென்ற கூத்துக்களும் பிரதான மாதிரிகளாகக் கையாளப்பட்டுள்ளன.*

*திறவுச் சொற்கள்: கூத்துப் போட்டி, கூத்தர்கள், மரபுரிமம், நவீன அறிவன் ஆதிக்கம், சமூக அரங்கு.*

**அறிமுகம்**

*கூத்தரங்கு மக்கள் வாழ்வதற்கும், சமுதாய இணைவிற்கும் உரியது. இது கூத்தர்களின் ஆற்றல், திறன், நிபுணத்துவங்களை வெளிப்படுத்தும் களமாகவுள்ளது. சமுதாயம் தமது உழைப்பைப் பகிர்ந்து ஒன்றுகூடித் திட்டமிட்டு, முகாமைசெய்து தாம் வாழும் ஊரை, சமுதாயத்தை மையப்படுத்திக் கொண்டாடி மகிழ்ந்து, வாழ்தலினூடாகப் பழகி (பயிற்சி பெற்று) அரங்கேற்றி பின் சுய மதிப்பீடு செய்வதாக விளங்குவதே கூத்தரங்காகும். இக்கூத்தரங்கு சமூகமையம் சார்ந்து நிகழ்வதனால் யாருடைய பொருளாதார முதலீடும் அங்கிருக்காது. ஆனால், முன்னீடும் முகாமைத்துவமும் சிறப்பாகக் காணப்படும். கூத்து திறந்தவெளியில் மக்கள் சுற்றியிருக்க நிகழ்த்தப்படும் கலைவடிவமாகும்.*

*இந்த நிகழ்த்துகையின் வெளியில் கூத்தர்கள் சமூகத்தில் மாண்பு பெறுபவர்களாக விளங்குவர். இக்கூத்துச் செயற்பாடு சமகாலத்திற்கு மிக அவசியமானதாகும். ஏனெனில், மனிதர்கள் இந்த உலகமயமாக்கற் சூழலில் நுகர்வுகளாகவும், தனியன்களாகவும் ஆக்கப்பட்டுள்ளனர். இவர்களை செயற்பாட்டினூடாக ஒன்றிணைப்பதற்கான பொறியை இக்கூத்தரங்கே கொண்டுள்ளதால் மிகப் பயனுள்ளதாக அமைக்கின்றது. இவ்வாறான கூத்தரங்கு நவீன கல்விப் பரப்பில் நின்று எம்மவர்களால் போட்டிக்காக வடிவமைக்கப்படும்போது சமுதாயத்தில் இருந்து புறந்தள்ளப்பட்டு, சமகாலத்திற்குப் பொருத்தமற்ற ஒன்றாக பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகின்றது. இதனால் கூத்தர்கள் பல சவால்களை எதிர்கொள்கின்றனர்.*

**ஆய்வுப் பிரச்சினையும் ஆய்வு நோக்கமும்**

*கூத்தை அதன் அழகியலில் மாற்றம் ஏற்படும் வண்ணம் போட்டிக்கு வடிவமைப்பதால் கூத்திலும், சமூகத்திலும் பொருத்தமற்ற சவால்கள் ஏற்படுகின்றன. ஆய்வு நோக்கமாக போட்டிக்கு கூத்து வடிவமைக்கப்படுவதால் அந்தக் கூத்து அழகியலிலும், ஆற்றுநரிடமும் ஏற்படும் சவால்களைக் கண்டறிதல் ஆகும்.*

**ஆய்வு முறையியல்**

*ஆய்வுப் பிரச்சினையைத் தீர்த்து ஆய்வு நோக்கங்களை நிறைவேற்ற இவ்வாய்வில் பண்புசார் வடிவமைப்பில் விளக்கமுறை ஆய்வு அணுகுமுறை கையாளப்படுகின்றது. இவ்வாய்வினை முன்னெடுப்பதற்கு கூத்துப் போட்டிகளில் நடுவராகக் கலந்து கொண்டு அவதானித்தல், களப் பயணம் மேற்கொள்ளல், நேர்கணால் போன்றன முதன்மைக் கருவியாகவும், இது தொடர்பான எழுத்துக்கள், இணையத்தள காணொலிகள் இரண்டாம் நிலை கருவியாகவும் பயன்படுத்தப்படுகின்றது. கலாசார திணைக்களங்கள், பாடசாலைகள் போன்றவற்றால் ஊருக்குள் கூத்துக்களைப் போட்டி நிபந்தனைக்கு அமைய வடிவமைத்து தரும்படி கோரும்போது கூத்தர்களாலும், அதன் ஆர்வலர்களாலும் பாரம்பரியமாக ஆடப்பட்ட பல கூத்துக்கள் மீள கால நேரச் சுருக்கங்களுடன் தயாரிக்கப்படுகின்றன. இதனைத் தயாரித்து போட்டிக்காகக் கொண்டு சென்ற கூத்துக்கள் பிரதான மாதிரிகளாக எடுத்தாளப்பட்டுள்ளன. இதில் கூத்துக் கலைஞர்கள், அதனை ஒழுங்கு செய்த அமைப்புக்கள், பாடசாலை ஆசிரியர்கள் போன்றோரைத் தேடிச் சென்று முறைசாராத வினாக்களைக் கேட்டு கலந்துரையாடி, பல விடயங்கள் தகவல்களாகச் சேர்க்கப்பட்டன. இவ்வாய்வாளர் கூத்துப் போட்டியில் நடுவராக அழைக்கப்பட்டு அதன் பணியைத் தொடங்கி முடித்தார். இக்காலத்தில் எதிர்கொண்ட பொருத்தமற்ற உரையாடல்கள், பேச்சுக்கள், குறை கூறல்கள் போன்றனவும் முக்கிய தகவல்களாக இணைக்கப்பட்டுள்ளன. மேலும், போட்டி முடிந்த பின்னர் வெற்றி தோல்விக்கு அப்பால் கிராமங்களில் பல உரையாடல் ஏற்பட்டு மன உளைச்சல்களுடன் காணப்பட்ட கூத்துக் கலைஞர்களை உற்றுநோக்கி, உரையாடியமையும் குறிப்பிடத்தக்க மாதிரிகளாக அமைகின்றன. இதனைவிட இவ்வாய்வு 2015ஆம் ஆண்டில் கல்லடி 'கல்வி கல்வி அபிவிருத்திச் சங்கத்தினரால்' நடைபெற்ற கூத்துப் போட்டியே முக்கிய மாதியாக உள்ளது. இதன் இப்போட்டி நிகழ்வில் ஆய்வாளர் பார்வையாளராகப் பங்குகொண்டிருந்தார்.*

**இலக்கிய மீளாய்வு**

*கூத்துத் தொடர்பாக பல ஆய்வுகள் அவரவர் தேவைக்கு ஏற்ப ஆய்வு செய்யப்பட்டு வந்துள்ளன. சி. மௌனகுருவின் 'மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்' எனும் நூலில் கூத்தின் ஆடல், பாடல், நிகழ்விடம் தொடர்பான பல விடயங்கள் விரிவாக உள்ளன (1998). அவ்வாறே செ. சுந்தம்பிள்ளையால் 'வட இலங்கை நாட்டார் அரங்கு' எனும் நூலில் இலங்கையின் வடக்குப் பிரதேசத்தில் நிகழ்த்தப்படுகின்ற கூத்து வடிவங்கள், அதன் கட்டமைப்பு, சமூக நிலை போன்றன தரப்படுகின்றன (2000). சி.ஜெயசங்கர் 'கூத்து மீளுருவாக்கம்' எனும் நூல் கூத்தின் சமுதாய நிலை, அதன் மீளுருவாக்கத்தின் தேவை போன்றன தரப்படுகின்றன (2006).*

*மேற்குறிப்பிட்ட ஆய்வுகள் அந்த ஆய்வாளர்களின் தேவை, நோக்கம் போன்றவற்றிற்கு அமைய ஆராயப்பட்டுள்ளன.*

**ஆய்வு இடைவெளி**

இந்த ஆய்வு ‘கூத்தைப் போட்டிக்காக வடிவமைத்தலும் எதிர்கொள்ளும் சவால்களும்’ எனும் தலைப்பில் ஆராயப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட ஆய்வுகள் அதன் நோக்கம் கருதி கூத்தரங்கின் தன்மையை வெளிப்படுத்துகின்றன. இதனால் இவ்வாய்வுத் தலைப்பிற்கும் விடயத்திற்கும் இடையில் இடைவெளி நிலவுகின்றது. கூத்துக்கலை அதன் ஆற்றுகை வெளியில் இருந்து போட்டி நிபந்தனையின் படி வடிவமைக்கப்படும் பொழுது கூத்தின் அழகியலில் ஏற்படும் தாக்கம், வெற்றி தோல்வி அடிப்படையில் கூத்தாடும் கலைஞர்கள் மத்தியில் தோன்றும் பொருத்தமற்ற உளத் தாக்கங்கள், ஊருக்குள் போட்டிக்குப் பின்னர் நிலவும் கருத்து வெளிப்பாடுகள் போன்றன இவ்வாய்வில் இடம்பெறுகின்றன. முன்னைய ஆய்வுகளில் இந்த விடயம் ஆராயப்படாததால் முக்கிய ஆய்வு இடைவெளியாக உள்ளது.

**கண்டுபிடிப்பும் கலந்துரையாடலும்**

**கூத்தரங்கும் போட்டிக்காக வடிவமைக்கப்படுதலும்**

ஈழத்தில் பல பாகங்களிலும் பயில்நிலையில் உள்ள இக்கூத்து ஒன்றுகூடிச் செய்து செயற்படுதல், கொண்டாடுதல், கூடிமகிழ்தல், கற்றுத் தேர்ந்து முன்னேறுதல், சுயமாக உணர்ந்து வாழ வழிகிடைத்தல், முன்னர் நடந்தவற்றை மீண்டும் ஞாபகப்படுத்தலுக்குரிய களமாகப் பயன்படுதல், தவறும்போது தட்டிக் கொடுத்தல், கூடி இயங்கும் பொறியிருத்தல், பண்பாட்டை வளர்த்தலும் கையளித்தலும் வலுப்பெறுதலும், சமூகம் புதிய சூழலில் செயற்படும்போது அதற்கு இயைந்து வாழவும் தொழில்களை வலுப்படுத்தவும் உதவுதல், சமூகமயமாதல், சமுதாயப் பல்கலைக்கழகமாகக் காணப்படுதல் என்பவற்றை கொண்டுள்ளது. இதனால், சமகால உலகமயமாக்கல் நெருக்கடிகளில் இருந்து தப்பிக்கவும் காலனிய சிந்தனைகளில் இருந்து விடுபடவுமான கருவியாக உள்ளது.

இன்றைய அதி - நவீன தொழிநுட்பத்தின் சுற்றி வளைப்பிற்கு மத்தியில் உள்ள மனிதர்களின் திண்டாட்டத்தில் இருந்து தப்பித்து கூடி வாழவைக்க வல்லதாக கூத்து விளங்குகின்றது. இந்தச் சமுதாய அரங்கான கூத்தரங்கு போட்டிக்காக வடிவமைக்கப்படும்போது கூத்தும் அதன்வாழ் மனிதர்களும் பணத்திற்குரிய நுகர்வுப் பொருள்களாக்கப்படும் நிலைமை வலுப்பெற்றுள்ளது. தாமாக இணைந்து தமது திறனைக் கொண்டாடி வாழ்ந்தவர்கள் விற்பனைக்குரிய சரக்காக, காட்சிப் பொருளாக வடிவமைக்கப்படுவதும் கூத்தர்கள் அதில் சிக்கித் தவிப்பதும் பெரும் சவாலாகவும் நெருக்கடியாகவும் உள்ளது.

கூத்தைப் போட்டிக்காக வடிவமைப்பது பல இடங்களிலும் நடைபெறுகின்றது. பாடசாலைகள், கலாசார திணைக்களங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் என்பன இதில் குறிப்பிடத்தக்கன. நிபந்தனைகளையும் சட்டதிட்டங்களையும் கொடுத்து, வரையறைகளையும் விதித்து அதற்கேற்ப கூத்து வடிவமைக்கப்பட வேண்டும் என அழைப்பிதழ் விடுக்கப்படுகின்றது.

**பாடசாலையில் கூத்துப் போட்டி**

*கூத்து பாடசாலையில் அங்குள்ள மாணவர்களால் 25 - 30 நிமிடங்களுக்குள் படச்சட்டமேடையைக் கருத்திற்கொண்டு ஆசிரியரின் பொறுப்புடன் வடிவமைக்கப்படுவதாக போட்டி விதி அமைகின்றது. பாடசாலையில் கூத்துப் போட்டி எனும் எண்ணக்கரு பேராசிரியர் சு. வித்தியானந்தன் காலத்தில் இருந்து ஆரம்பமாகியது. இக்காலத்தில் இருந்தே படச்சட்டமேடையில் கூத்து ஆடும் போட்டி நிபந்தனைகள் உருவானது. இதன் பொருத்தமின்மையும், கூத்தில் ஏற்படுத்திய தாக்கமும் தனியான ஆராய்ச்சிக்குரியது.*

**மன்றங்களின் கூத்துப் போட்டி**

*பாடசாலை தவிர்ந்த ஏனைய நிறுவனங்கள், மன்றங்கள் போட்டிக்காக கூத்தை வடிவமைத்துத் தர அழைக்கப்படும்போது சுமார் 60 நிமிடங்கள் கொடுக்கப்பட்டு வட்டக் களரியிலேயே நிகழ்த்தப்பட வேண்டும் என போட்டி நிபந்தனை விதித்து அறிவுறுத்துகின்றது. இரண்டு இடத்திலும் கூத்து தொனிப்பொருளாக அமைந்தாலும் அதனை நிகழ்த்துவோர் முறையே மாணவர்களும், பாரம்பரியமாகக் கூத்தாடும் கூத்தர்களுமே ஆவர். இங்கு நவீன நாடக முறையில் கூத்தைத் தயாரிக்க வேண்டும் எனும் உந்துதலைக் கொடுப்பது பொருத்தமற்றது. இவ்வாறு செயற்படுவது காலனிய சிந்தனையை மேனிலையாக்குவதாக அமைந்துவிடும். இது எமது பண்பாட்டையும் வாழ்தலையும் நாகரிகமற்றது காட்டுமிராண்டித்தனமானது என்று ஒதுக்கிவிட்டதைப் போன்றதாகிடும்.*

*கிளாட் ஆல்வரைஸ்*

> *"நவீனத்தினூடே திறந்ததும் சுதந்திரமானதுமான மதிப்பீடு நடைபெறுகின்றது எனும் கருதுகோள் பழைய கலாசாரங்களை அடிபணிய வைப்பதாக உள்ளது" (2009, ப. 233)*

*எனும் கூற்று அவதானத்திற்குரியது. கூத்தரங்கின் போட்டிச் சூழலில் பாரம்பரிய அறிவும் வாழ்தலும் அழிக்கப்படுகின்றது. இதன்மூலம் நவீனம் சில அரங்க வெளியில் சுதந்திரமான வளர்ச்சியைத் தராது என்பதைப் புலப்படுத்துகின்றது.*

*கூத்தரங்கைப் போட்டிக்காகத் தள்ளுவது ஒருவகையான கலைச் சுரண்டலாகும். காலனியம் தனது இராணுவத்தினூடாகச் சுரண்டியது போல் இன்று நவீன அறிவு எனும் சில மூட நம்பிக்கையுடன் சுரண்டப்படுகின்றது. கூத்துப் போட்டி எனும் எடுப்பினூடாக இதுவே நடைபெறுகின்றது.*

**கூத்தரங்கு போட்டிக்காகத் தயாரிக்கப்படும்போது அதன் வெளியில் இடம்பெறுபவவை**

*கூத்தரங்கின் சமுதாய மைய நிகழ்வுகளை விலக்கழித்து, விடுவித்து நிறுவனங்களின் அனுசரணையோடு போட்டிக்கு வரும்போது அண்ணாவிமார், கூத்தர்கள் போன்றோரிடம் பல நெருக்கடிகளும், சவால்களும் இடம்பெறுகின்றன. வெளிநாட்டு நிதிநிறுவனங்களைப் பெற்று உள்ளூரில் வேலை செய்யும் நிறுவனங்கள் அந்த நிதியினூடாகப் போட்டியை நடாத்துகின்றன. அவ்வேளையில் உள்ளூரில் உள்ள நிறுவனத்தின் அதிகாரிகளும் அதன் குழுவிலுள்ளவர்களும் தமது முழு அதிகாரத்தையும்*

*பிரயோகிக்கின்றனர். காலனியத்தின் வெற்றி பாரம்பரியக் கூத்தர்கள் வார்த்தைகளாலும் எடுத்துரைப்புக்களாலும் ஓரம்கட்டப்படுவதாகும்.*

*கூத்து ஊருக்குள் இல்லை அதனை பேணும் நோக்கில் கூத்துப் போட்டி வைக்கப்படுகின்றது என ஏற்பாட்டாளர்களாலும் அதில் அதிதிகளாக வருவோராலும் சரமாரியான வார்த்தைகள் பிரயோகிக்கப்படுகின்றன. கூத்தைப் பரம்பரை பரம்பரையாக, பாரம்பரியமாக அதன் சமுதாயம் தழுவியதாக முன்னெடுப்போர் போட்டிக்காகக் கூத்தைக் கொண்டு வரும்போது மறுக்கப்பட்டு, மறக்கப்பட்டு, புறக்கணிக்கப்படுகின்றனர். இவ்வதிகாரம் வன்முறையாகவே அமைகின்றது. இந்த நிலை பாரம்பரியக் கூத்தர்களை வார்த்தைகளாலும் எடுத்துரைப்புக்களாலும் ஓரங்கட்ட வைக்கின்றது.*

*போட்டிக்கு வரும் அண்ணாவிமார், கூத்தர்கள் முன்னிலைப்படுத்தப்பட்டு பேசப்படுவதில்லை. கூத்தைப் பொருத்தமற்ற முறையில் எழுதி ஆய்வு செய்வோரையும், கல்வி அதிகாரிகளையுமே முன்னிலைப்படுத்துவதைக் காணலாம். இப்போட்டி ஏற்பாட்டாளர்களால் கூத்தை ஆவணப்படுத்த வேண்டும் பெயரில் வீடியோப் பதிவுகளும் இடம்பெறுகின்றது. ஒளிப்பதிவுகளைச் செய்யும் போது சில பொருத்தமற்ற சூழல் உருவாகின்றது. தாங்களாலே கூத்தர்கள் நகரப்பகுதிக்கு வருகின்றார்கள் என்பதைக் காட்டுவதற்காகவே ஒளிப்பதிவு செய்வது நடைபெறுகின்றது.*

*கிராமப் புறத்தில் இருந்து நகர்புறத்திற்கு கூத்தர்கள் கூத்தாட வரும்போது அவர்கள் வில், அம்புகளும் கூத்து உடுப்புக்களுடனும் வரும்போது வீடியோ பதிவு செய்யப்படுகின்றது. இது இரண்டு வகைகளில் நோக்கப்படுகின்றது. ஒன்று, தாம் செய்யும் கூத்துப் போட்டியின் போதுதான் கூத்தர்கள் நகர் புறத்திற்கு வருகின்றனர் என்பதை எடுத்துக் காட்டுவது. மற்றையது, தாமே கூத்தை ஆவணப்படுத்துகின்றோம் என்பது. ஆனால், கள நிலவரத்தின்படி இன்றுவரையும் ஊருக்குள் செழுமையாகக் கூத்தாடப்படக் காரணம் கூத்தர் சமுதாயமேயாகும் என்பது அறிதலுக்குரியது.*

**போட்டிக்காக வடிவமைக்கப்படும்போது எதிர்கொள்ளும் சவால்கள்**

*போட்டியின் போது பல்வேறுபட்ட சிக்கல்கள் கூத்தருக்குள் ஏற்படுவதோடு, கூத்திலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இவ்வாறு கூத்தில் ஏற்படும் மாற்றம் சமுதாய நிலை நின்ற மாற்றமாக இருக்காது. நவீன நாடகம் ஒன்றில் பயன்படுத்தப்படும் ஆடல், பாடல் போல் போட்டிக்காகத் தயாரிக்கப்படும் கூத்திலும் கொண்டுவர வேண்டும் எனும் மனப்பாங்கு நிலவுகின்றது. இராவணேசன் நாடகத்தின் ஆற்றுகைக்காக ஆடல், பாடல் பயன்படுத்தப்படுகின்றது. இது மாதிரித் தயாரித்தால்தான் தாமும் மேனிலை அடையலாம் எனும் போக்கு நிலவுகின்றது. இது சமஸ்கிருதமயமாதலை ஒத்தது. இந்த 'பண்பாட்டு மேலாண்மை' சிந்தனை அடிப்புற அரங்க அணுகுமுறையைச் சிதைக்கும் தன்மையுடையது. தம்மை உயர்ந்தவர்கள் எனக் கூறுவோரின் வாழ்தலைப் பின்பற்றி வாழ்ந்தால் தாமும் உயர்ந்தவர்களாகலாம் எனும் மாயையே சமஸ்கிருதமயமாதல் எனப்படும். இத்தன்மையானது பன்முக வித்தியாசங்களை மதிக்காத சமுதாய நலன் சாராத உயர் சாதியத்தை வலுப்படுத்துவதான அதிகாரம் சார்ந்தது. இப்போக்கே கூத்தரங்கின் போட்டிச் சூழலிலும் முன்னிலை வகிக்கின்றது. கூத்தரங்கு வளர்ச்சியடைவதற்கும்; விரிவாகுவதற்கும் போட்டி சிறந்தது என்பது பொருத்தமற்றது.*

*சமுதாய அரங்கான கூத்தரங்கைப் போட்டிக்காக வடிவமைக்கும்போது கூத்தரின் ஆற்றல், திறன், நிபுணத்துவம் போன்றவை வெளிப்படுத்தப்படுகின்ற நிலைமை காணப்படினும், பல்வேறுபட்ட சிக்கல்கள் கூத்தர்களுக்குள் ஏற்படுகின்றன. கூத்தை நவீன அரங்கியல் பார்வையில் நோக்கும் போது*

*சிக்கல்கள் வருகின்றன. கூத்தர்கள் ஊருக்குள் ஆடிய கூத்தைப் போட்டி நிபந்தனைகளுக்கும், சட்ட திட்டங்களுக்கும், சுற்று நிரூபத்திற்கும் ஏற்ப போட்டிக்காகத் தயார்படுத்திச் சென்றாலும் இறுதியில் தெரிவுசெய்யப்படாது புறந்தள்ளப்படுகின்றமை பெரும் திண்டாட்டமாக உள்ளது.*

*போட்டிக்கு வரும் கூத்துக்களும் போட்டிக்கு வருவோரும் ஊருக்குள் கூத்தாடும் பாரம்பரியமான ஆட்டம், பாட்டு நுட்பமுறைகளைப் புறந்தள்ளிவிட்டு நவீன முறையில் மாற்றிக் கூத்தைப் போட்டிக்குக் கொண்டுசெல்ல வேண்டும், அப்போதே வெற்றி பெறலாம் என்றும் செயற்படுகின்ற மனநிலையை ஏற்படுத்துகின்றது. இது பொருத்தமற்றது என்பதும், இங்கு பண்பாட்டுத் தாழ்வு மனப்பான்மை வலுப்பெறும் என்பதும் கவனத்திற்குரியது.*

*அவ்வாறே, ஊருக்குள் 25, 30 வருட கூத்தனுபவம் உள்ள கூத்தர்கள் போட்டிக்குக் கூத்தைக் கொண்டு வரும்போது ஆட்டமுறைகள், பாடல் மெட்டுக்கள், ராக தாளங்கள், தரு எடுத்து ஆடுதல் ஆகிவற்றை வேறு ஓர் ஒழுங்குக்குக் கொண்டுவர நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இவ்வாறான நிர்ப்பந்திப்பு போட்டியைச் செய்யும் முகவர்களினால் மறைமுகமாகக் கொடுக்கப்படுகின்றது. புதிதாக நவீன நாடக உத்திகள் போல் போட்டிக்குக் கூத்தைத் தயாரிக்கும்போது எவ்வாறான நிலைமைகள் உருவாகும் என அறிதலும் அவசியம்.*

1. *போட்டிக்குப் பின்னர் பொருத்தமற்ற முறைமையில் கூத்தை ஊருக்குள் பழக்க வாய்ப்பு உண்டு.*
2. *போட்டியைப் பார்க்கும் இளம் சமுதாயத்தினர் இதுதான் கூத்து என நம்ப வாய்ப்பு உண்டு.*

*கூத்து அதன் சமுதாயத்திலிருந்தும், தொடர் செயற்பாட்டிலிருந்தும் பிரிக்கப்படுவது மாத்திரமன்றி, அதனை அதன் ஆற்றுகை உயிர்த்துவத்திலிருந்தும் அழிக்கும் போக்கை இது ஏற்படுத்துகின்றது. சடங்கை அல்லது கோயில் திருவிழாவை, அதன் வாழ் மக்களின் பக்தி நிலையைப் போட்டிக்காக முன்னெடுக்கப்படும் போது என்ன நிலை ஏற்படும் என்பதைப் போட்டி ஏற்பாட்டாளர்கள் கவனத்தில் கொண்டால் நன்றாக அமையும். இது பற்றிய உரையாடல் மிக அவசியமாகும்.*

*கூத்தைப் போட்டிக்காக வடிவமைத்து வெளி உலகத்திற்கு அறிவிக்கும் நிலைமை இந்த உலகமயமாக்கல் சூழலில் காணப்பட்டாலும் பல்தேசிய நிதிநிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் உணர்வற்ற, உயிரற்ற, இலாபத்திற்கான முத்திரை பதித்தலுக்கான ஒன்றாக இருப்பதைப் போன்று பாரம்பரியக் கலைகளும் அவ்வாறு காட்சிக்குரியதாக கொண்டுவரப்படும் சூழலைக் கொடுத்துவிடும்.*

***1. கூத்து அழகியலில் ஏற்படும் நெருக்கடிகள்***

***அ). கூத்தைப் பொருத்தமற்ற முறையில் வடிவமைக்க வழிப்படுத்தல்***

*கூத்தைப் பாரம்பரிய முறைப்படி உண்மையாகச் செய்யும் கூத்துப் போட்டியாளர்களையும் நவீன முறைப்படி செய்யும் கூத்துப் போட்டியாளர்களையும் மோதல்களுக்குள்ளாக்குவதோடு, வெற்றிபெறும் நவீன முறைப்படியான கூத்தே சரியானது எனப்படுகின்றது. இதனால் பாரம்பரிய முறைப்படி ஆடியோரையும் நவீன முறைப்படி செய்யவேண்டும் எனும் சூழலை ஏற்படுத்தும் ஆபத்தான போக்கு உருவாகின்றது எனலாம்.*

குறிப்பாக, ஊருக்குள் காலங்காலமாக கூத்தாடும் கூத்தர்கள் தாம் ஆடும் தமது கூத்தின் சமுதாயப் பண்புகளை விடுத்து "போட்டிகளுக்குப் போகும் போது நவீன முறையில் செய்தால்தான் அவனுகள் எடுப்பானுகள்" (பிரபாகரன். கு, நேர்காணல், 26.04.2015) என நினைத்து தயாரித்து கொண்டுவரும் மனநிலையில் கூத்தர்கள் செயற்படுகின்றமை கவனத்திற்குரியதாகும். போட்டி ஏற்பாட்டாளர்களுக்கும் அதில் நடுவர்களாக கடமையாற்றுவோர்களுக்கும் பாரம்பரியக் கூத்தரங்கின் அழகியல் மையம் தெரியாது. நவீன முறையில் செய்து கொண்டு வந்தால்தான் அவர்கள் கூத்து என நினைக்கிறார்கள் என்று எண்ணி ஊருக்குள் கூத்தாடுவோர் கூத்தை வடிவமைக்கும் நிலை கூத்துப் போட்டியால் உருவாக்கப்பட்டுள்ளது.

நவீன நாடகங்களில் கூத்தாட்ட மாதிரிகளும் பாடல்களும் கொண்டு தயாரிக்கப்படுவது வழமை. இந்த முறைமைகளை மையக்கருவாகக் கொண்டு போட்டிக்காக தயாரிக்கப்படும் கூத்துக்களில் அதன் தயாரிப்பாளர்கள் பயன்படுத்துகின்றனர். படச்சட்ட மேடையில் கூத்தின் ஆட்டம், பாட்டு முதலான அழகியல் அம்சம் தழுவிய நவீன நாடகத்தினைப் போல போட்டிக் கூத்தில் ஆட்டமும் பாட்டும் பழக்கப்படுகின்றது. "இந்த முறைமையின் அடிப்படையில் தயாரித்தால் மட்டுமே வெற்றிப் பெற முடியும்" என கூத்தர்கள் கூறுகின்றனர். இது பற்றி 2015இல் கல்வி அபிவிருத்திச் சங்கம் நடாத்திய கூத்துப் போட்டியில் முதலிடம் தெரிவு செய்யப்பட்ட கூத்தில் ஆடியவரும் பாரம்பரிய முறைப்படி கூத்தாடுபவருமான கு. பிரபாகரன் பின்வருமாறு குறிப்பிடுவது கவனத்தில் கொள்ளத்தக்கது.

> "2015இல் கல்வி அபிவிருத்திச் சங்கக் கூத்துப் போட்டியில் நாங்கள் தயாரித்த கூத்தானது வழமையாக ஊருக்குள் ஆடியதற்கு மாறானது. காரணம் இதற்கு முன்னர் நான் தமிழ்த்தினப் போட்டிக்கு ஊரில் ஆடிப் பழகியது போல் பழக்கிச் சென்றேன். முதற் சுற்றிலேயே புறக்கணிக்கப்பட்டு விட்டோம். நகர்புறத்தில் உள்ள பிரபல பாடசாலையிலும் பழக்கினேன். அது மூன்றாம் இடத்திற்கு தள்ளப்பட்டது. இப்போது போட்டிக்காக அறிவிக்கப்பட்டவுடன் வழமைபோல் பாரம்பரிய முறைப்படியே ஆடினோம். ஆனால், 2ஆம், 3ஆம் தடவை பழகியபோது (Rehearsal) இவ்வாறு ஆடினால் வெற்றி பெற முடியாது என தமிழ்த்தினப் போட்டிகளில் கூத்துக்கு பொறுப்பாக இருந்த ஆசிரியர்களிடம் உரையாடினோம். அதேவேளை எல்லோரும் இணைந்து நவீன நாடகத்தில் பயன்படுத்தப்படும் கூத்தாட்ட முறைமைகளைப் பழகிக் கொண்டோம். வடமோடியில் விருத்தம் பாடுதல் இரண்டு வரிக்கு ஒரு தடவைப் பாடி முடித்து மத்தளத்தில் தட்டி ஆடுதல் பின் பாடுதல் என்றதையும் சேர்த்தோம். கட்டியக்காரன் இல்லாத கூத்தையே முன்னைய கூத்துப் போட்டியில் தெரிவு செய்தனர். அதனையும் செயற்படுத்தினோம். ஒரு மணித்தியாலயத்தில் முடித்தால் தான் தெரிவு செய்வார்கள் என்றனர். அதையும் செய்தோம்" எனக் கூறும் அவர்,
>
> "நகர்ப் பகுதி ஆக்களுக்கு பாடசாலை, பல்கலைக்கழகத்தில் ஆடுறதுதான் கூத்து என்று இருந்ததாலேயே நாங்க மாறி ஆடினோம். இராம நாடகத்தில் வரும் பாடல் இராவணேசனில் இல்லை. எல்லாம் புதிய பாடல், புதிய ஆட்டம் அவ்வாறே, 13ம், 14ம் போர் வடமோடிக் கூத்தின் சண்டைப் பகுதியை எடுத்து புதிதாக எழுதப்பட்டு "உத்தரை புலம்பல்" எனும் கூத்தை ஆடினோம். ஆனால், ஊருக்குள் ஆடிய மாதிரி ஆடியிருந்தால் எடுப்பட்டிருக்கமாட்டோம்" (நேர்காணல், 26.04.2015)

என தனது அனுபவத்தை வெளிப்படுத்தினார்.

இக்கூற்றின்மூலம், கூத்தின் சரியான ஆற்றுகை அழகியல் எவ்வாறு போட்டி மனப்பான்மைக்காக கூத்தர்களாலேயே மாற்றுவிக்கப்படும் ஆபத்தை உணரலாம். கூத்து தமிழ்த்தினப் போட்டியில் வடிவமைக்கப்பட்ட நிலைமையில் ஏற்பட்ட சிக்கல், நடுவர்களும் அதே எண்ணத்துடன் செயற்பட்டதன் விளைவையே இது உணர்த்துகின்றது. குறிப்பாக, தமிழ்த்தினப் போட்டியில் அரை மணி நேரத்திற்குள் கூத்தின் ஆட்டம், பாட்டு ஆகியவற்றைக் கொண்டு அண்ணாவியாரைப் புறந்தள்ளி, தயாரிக்கப்பட்டு படச்சட்ட மேடையில் நிகழ்த்துதல் வழமை. மற்றையது சில பல்கலைக்கழகத்தில் ஆடப்படும் கூத்து பாரம்பரிய அரங்க வெளியை மையப்படுத்தி ஆடப்படவில்லை என்பதும் படச்சட்ட மேடையில் கூத்தின் கூறுகளைக் கொண்டு நவீன நாடகமாக நடிக்கப்பட்டது என்பதும் இதனூடாகப் புலப்படுகின்றது. இதுவே வெற்றியும் பெறுகின்றது. ஏனெனில், நடுவர்களும் அதன் சூழலிலே உருவானவர்கள். இதனால், கூத்தரங்கின் இயங்கியற் தளத்தில் சமுதாயம் இணைந்து பழகும், வாழும் உண்மையான சூழல் மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் இல்லை. போட்டியினால் கூத்து சமூகத்தின் தொடர் செயற்பாட்டில் இருந்து பிரிக்கப்படல், அரைமணி நேரத்தில் படச்சட்டமேடையில் ஆடப்படுவதுதான் கூத்து என இளம் தலைமுறையினரை நம்பவைத்தல், கூத்தரங்கின் நிபுணத்துவம் பெற்ற கூத்தரைப் புறந்தள்ளுதல், மத்தளத்தை ஓரளவு அடிக்கப் பழகுபவர்களே அண்ணாவிமார் எனப் பரப்புரை செய்தல் போன்ற பொருத்தமற்ற சூழலின் தொடர்ச்சியையே இக்கூத்துப் போட்டியிலும் அவதானிக்கலாம். இவ்வாய்வாளர் 2012ஆம் ஆண்டுக்குப் பிறகு 'ஆற்றுகைமையமாக கூத்தைக் கற்பித்து' அதனூடாக உருவான கூத்துக்களின் வடிவமைப்பு கூத்தின் வழமையான ஆற்றுகை அழகியலை மையப்படுத்தியது. இது வட்டக்களரியில் அதன் ஆட்ட, தாள, பாட்டு, நடிப்புக்கு அமைய வடிவம் பெற்றது. 'ஆற்றுகைமையக் கற்றல்' இலங்கைப் பல்கலைக்கழகச் சூழலில் கிழக்குப் பல்கலைக்கழகத்திலேயே இவ்வாய்வாளரால் முதன்முதல் அறிமுகமானது.

இதனை கூத்தின் இயங்குதளம் பற்றியறிந்த து. கௌரீஸ்வரன் இன்னுமொரு வகையில் குறிப்பிடுவது கவனத்திற்குரியது.

> "கூத்துப் போட்டி என்ற பெயரில் நடத்தப்பட்டு வந்த நிகழ்ச்சியினூடாக நகர்புறங்களில் வளரும் மத்தியதர வர்க்கத்தினரைச் சேர்ந்த பெரும்பாலான இளம்தலை முறையினருக்கு உண்மையான யதார்;த்தமான கூத்தின் பரிமாணம் விளங்கிக் கொள்ளமுடியாத நிலையே இருந்து வருகின்றது. பலர் கூத்து என்றால் அது பாடசாலைகள் தயாரிக்கும் தமிழ் மொழிதினப் போட்டிக் கூத்துக்களையே மனத்திரையில் காணும் நிலை உள்ளது" ((Batti news> 02.02.2015)

என்பதன்மூலம் பொருத்தமற்ற சூழலை அறியலாம். பாடசாலைச் சமூகத்தில் போட்டிக்காகக் கூத்து தயாரிக்கப்படும்போது அது வெற்றிக்காகச் சண்டைபிடிக்கும் சூழலை ஏற்படுத்துகின்றதை அறியலாம். அத்தோடு, ஆக்கத்திறனற்ற இப்போட்டியில் எதிர்மறை மனப்பாங்கே வலுப்பெறுகின்றது. இச்சூழல் பாரம்பரியக் கூத்தரங்கில் பொருத்தமான சூழலை ஏற்படுத்துகின்றது என்பதை அறியலாம். இவ்வாறான பொருத்தமற்ற சூழலினால் 2015இல் இருந்து கூத்து தமிழ்த்தினப் போட்டியில் இருந்து நீக்கப்பட்டுள்ளது என்பதும் கவனத்திற்குரியது.

இவ்வாறான பொருத்தமற்ற சூழலை ஏற்படுத்துவதே காலனிய மனப்பாங்கின் வெற்றியாகும். இதனையும் தாண்டி போட்டி நிபந்தனைகளுக்கு ஏற்ப பாரம்பரியமாகக் கூத்தாடிவரும் கூத்தர்கள், போட்டிக்காக பாரம்பரியக் கூத்தரங்கின் தனித்துவத்தோடு நேர்த்தியாகத் தயாரித்தாலும் கவனத்தில் எடுக்காது முதற்சுற்றிலே புறம் தள்ளிவிடப்படுகின்றமையும் கவனத்திற்குரியது. இதனால், போட்டிக்கு

*கூத்தை புதிய முறைப்படி (நவீன நாடக முறைப்படி) தயாரிக்க வேண்டும் எனும் நிலைக்குத் தள்ளப்படுகின்ற பொருத்தமற்ற சூழல் உருவாகின்றது.*

*போட்டிக்காகக் கூத்தைக் கொண்டுவரும்போது கூத்துமில்லாத, நவீன நாடகமும் இல்லாத புதிய முறையிலேயே பரவாலக்கப்படுவதால், கூத்தர்கள் மத்தியில் மனச்சஞ்சலத்தை ஏற்படுத்துகின்றது. இளம் தலைமுறையினரும் அதையே கூத்து எனக்கூறும் நிலையும் உருவாகிவிடும். கூத்தரங்கின் அழகியல் வெளிப்பாடு மாத்திரம் கவனம் செலுத்தப்பட்டு தயாரிக்கப்படும் வேளையிலும் கூட புறக்கணிப்பே நிலவுகின்றது.*

*பாரம்பரியக் கூத்தரங்கை நவீன நாடகப் பார்வையில் தயாரிக்கப்படுபவையே முதன்மைப்படுத்தப்பட்டு, முன்னிலைக்கு வருகின்றது. எடுத்துக்காட்டாக, "2015 இல் கல்வி அபிவிருத்திச் சங்கத்தினால் நடந்த கூத்துப் போட்டியில் இரண்டாவது வந்த "நல்லதங்காள் கூத்தும்", மூன்றாவது வந்த "கர்ணன் மோட்சம்" கூத்தும் பாரம்பரிய முறைப்படி மிகவும் நேர்த்தியாகத் தயாரிக்கப்பட்டவையாகும். ஆனால், அது முதலாவதாக எடுபடவில்லை" (புவிக்குமார், க, கேதீஸ்வரன், மா, குழுநிலைக் கலந்துரையாடல், 20.04.2015) என அதனைத் தயாரித்த பாரம்பரியமாகக் கூத்தாடி வரும் கூத்தர்கள் கூறினர். இதன்மூலம் நடுவர்களாக அண்ணாவிமார் செயற்பட்டாலும் இறுதி முடிவை போட்டி ஏற்பாட்டாளர்களே எடுப்பதாகச் சந்தேகிக்கின்றமை தெரிகிறது.*

*சமகாலத்தில் இளம் கூத்தர்கள் ஊருக்குள் கூத்தாடி வருவதானது அதன் வலுப்படுத்துகையாகவே அமைகின்றது. இது அவர்களுக்கு மகிழ்வூட்டலையும் அறிவூட்டலையும் கொடுப்பதோடு, செய்து செயற்படுவதனூடாக ஒன்றிணைய வழிவகுக்கின்றது. விருப்போடு ஆடுபவர்களைப் போட்டிக்கு இழுத்துப் பரிசாகப் பணத்தையும், சான்றிதழையும் காட்டி அதில் கவர வைப்பது பொருத்தமானதல்ல என்பது கூத்தர்களின் கூற்று சுட்டிநிற்கின்றது. சுய உழைப்புடன் ஆடி மகிழ்ந்த கூத்துச் சூழலை மாற்றி, பணமும் சான்றிதழும் கொடுத்தால்தான் கூத்தை ஆடுவார்கள் எனும் நிலை உருவாகக்கூடாது என்பதும் புலனாகின்றது.*

*நவீன நாடகம் போன்ற தயாரிப்பு யாருக்கானது? ஏன் அவ்வாறு தயாரிக்க வேண்டும்? யார் அவ்வாறு எதிர்பார்ப்பது? எனும் வினாவை எழுப்பி கட்டவிழ்க்கும்போது, அது "அதிகார நிலையில் நிற்பரை அங்கீகரிப்பதற்காகவும் கூத்தரைப் ஓரங்கட்டி தாமே முன்னிலை பெறுவதற்காகவும்" எனக் கூறமுடியும். போட்டிக்கான களநிலவரம் இதுவாகும். இதுபற்றி கலாசார உத்தியோகஸ்தர்களும் அதன் இணைப்பாளர்களும் கூறுவது கவனத்திற்குரியது. "போட்டிக்காகக் கூத்தை வடிவமைக்க வைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தோல்வியே வருகின்றது. அதில் வெற்றியில்லை" எனப்படுகின்றது.*

***ஆ). கூத்து ஆடுவோரிடம் ஏற்படும் மனநிலை***

*கூத்து போட்டிக்காக எழுதி ஆற்றுகை செய்யப்படும்போது பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. போட்டிக்காகத் தயாரிக்கப்படும் கூத்துக்களில் ஆடும் கூத்தர்களை ஆற்றுகை நிலையில் நிற்கும்போது அவதானிக்கையில் முகபாவங்கள், ஆட்டமுறைகள், மன நிலைகள் என்பன பெரும் மாறுதலுடன் காணப்படுக்கின்றது. போட்டியில் வெற்றி பெறுவதே மனதில் ஓடிக்கொண்டிருக்கும். ஆனால், கூத்தரங்கு கொண்டாடுவதற்குரியது. அதில் கூத்தர்கள் மன மகிழ்வுடன் நெகிழ்வுத்தன்மையுடன் தமது பாத்திர உருவாக்கத்தை வெளிப்படுத்துவர். போட்டியின் நேரக் கட்டுப்பாட்டுடனே செயற்படுவர். இதனால்,*

*தடுமாறினால் முதலிடம் வரமுடியாது எனும் மன இறுக்கத்துடன் செய்து காட்டும் நிலைமையே இங்குள்ளது.*

*அரங்கேற்றவிழாவில் கூத்தர்களை உற்சாகப்படுத்தி, கௌரவப்படுத்தி வாழ்த்துக்கள் தெரிவித்தல், உறவினர்கள் பண உறை வழங்குதல், பூமாலை அணிதல், வரவின்போது பட்டாசி வெடிக்கவைத்தல் முதலான சமுதாய மகிழ்வு இல்லாதொழிக்கப்படுகின்றன. ஆகவே, போட்டிக்கான ஆற்றுகையின்போது மன இறுக்கத்துடன் நிகழ்த்துவதையும் ஊருக்குள் ஆடும்போது மன இறுக்கம் அற்று மிகவும் சந்தோசத்துடன் ஆடிமுடிப்பதையும் காணலாம். இதனால், போட்டிக்குக் கூத்தை வடிவமைப்பது பொருத்தமானதா? என்பதைப் போட்டி ஏற்பாட்டாளர்கள் சிந்திப்பது அவசியமானது.*

*கதை அம்சமானது சுருக்கப்பட்டு நீண்ட கதையில் ஒரு பகுதியை அரைமணி நேரத்திற்குள் மாத்திரம் எடுத்து முன்னிலைப்படுத்துகின்றமை நிலவுகின்றது. இதுபற்றி புலவர் க. அருளம்பலம் கூறும்போது "17ம், 18ம் போர் பருத்திச்சேனையில் ஆடப்பட்டது. இது போட்டிக்கு 'கருணன் மோட்சம்' என ஒரு மணித்தியாலத்திற்கு ஏற்ப சுருக்கி எழுதப்பட்டது. அவ்வாறே, '13ம், 14ம் போர்' முழுக் கூத்தும் "உத்தரை புலம்பல்" ஆக எழுதப்பட்டுள்ளது. அவ்வாறு எழுதப்பட்டாலும் அதில் மகாபாரதத்தில் ஓர் இடத்திலும் துரோணர் தேரோட்டவில்லை. ஆனால், இதில் துரோணர் கர்ணனுக்குத் தேரோட்டியாக வந்தமை காட்டப்பட்டது" (நேர்காணல், 26.04.2015) என்று குறிப்பிட்டார். ஊருக்குள் பாரதக் கதையைப் படித்தவர்கள் ஏன் கூத்தை இவ்வாறு கெடுக்கிறார்கள் என்று கூறியதையும் அறியமுடிந்தது.*

*கூத்தரங்கு நவீன அரங்கப் பார்வையில் எழுதப்படும்போது அது வழமையான போக்கிலிருந்து மாறுபடுகின்றது. விற்பனைக்குரிய பொருளாகவும் காட்சிக்குரியதாகவும் வடிவமைக்கும்போது எல்லோருக்கும் பொதுவான கூத்து ஒருவருக்குரியதாக ஆகிவிடும் ஆபத்து நிலவுகின்றது. இதுவே அதிகாரத்தின் தேவையுமாகும்.*

*நிகழ்த்துகையில் ஏற்பட்ட மாற்றங்களைப் பற்றி அண்ணாவியார் ப. கதிர்காமநாதன் இவ்வாறு கூறுகின்றார்.*

> *"கல்லடியில் நடந்த கூத்துப் போட்டியில் முதலாமிடம் தெரிவு செய்யப்பட்ட கூத்தில் ஆட்டம், பாட்டு வழமையானவை போன்று இருக்கவில்லை. புதிதாக முறையில் இருந்தது. வடமோடிக் கூத்தில் தென்மோடிக் கலப்பு இருந்தது. மத்தள அடியிலும் தொட்டுக்கும்புடு இடத்திலும் இது வந்தது. சபையோராக களரிக்குள்ளும், பிற்பாட்டுக்கு மூன்றுபேரை களரி ஓரத்திலும் நிற்பாட்டினர். இது மேடையில் நிற்பதைப்போன்றதாக இருந்தது. தாளத்தை அடித்தடித்து முன்னுக்கு நீட்டி நீட்டி ஆடிச் செய்ததால் அண்ணாவியாரைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் நிலை வந்தது" (நேர்காணல், 26.04.2015)*

*என்று அக்கூத்துப் பற்றி தமக்கு புலனாகியதைக் கூறினார். இங்கு கூத்து ஊருக்குள் வழமையாகப் பயில்வது போல் இருக்கவில்லை என்பதும் படச்சட்ட மேடைக்குரிய அனுபவத்துடன் ஆற்றுகை செய்யப்பட்டதையும் அறியலாம். எனவே, போட்டிக்காக வடிவமைக்கப்படும் கூத்துக்கள் நல்ல நாடகமாகவோ, கூத்தாகவோ இல்லை எனும் முடிவுக்கும் வரலாம்.*

***2. கூத்தருக்குள் ஏற்படும் பொருத்தமற்ற நெருக்கடிகள்***

போட்டிச்சூழலில் அண்ணாவியாரும் கூத்தாடுவோரும் ஓரங்கட்டப்படுவதானது, ஊருக்குள் கஷ்டப்பட்டு அக்கஷ்டத்தோடு மகிழ்ந்து கூத்தாடி வந்தவர்களுக்கு கூத்தைப் போட்டிக்காக வடிவமைக்கும் மனக்கசப்பையும் குரோதத்தையும் ஏற்படுத்தும் நிலைமை காணப்படுகின்றது. அதிகாரிகளுடன் மட்டுமல்ல கூத்தர் குழுவிற்குள்ளே மனச் சஞ்சலத்தையும் திண்டாட்டத்தையும் ஏற்படுத்துகின்றது. இதனால் விரும்பி கூத்தாடிய நிலை இல்லாது போகும் நிலை உருவாகிவிடுகின்றது.

ஊருக்குள் மனக் கசப்பும் போட்டியால் பழிவாங்கும் நிலையும் கட்டியெழுப்படும்போது ஒற்றுமையாக செயற்படுவது குறைந்துள்ளது. இந்தப் பொருத்தமற்ற சூழலை உருவாக்குவது சிறந்ததாகுமா? சிந்திக்கப்பட வேண்டியதாகும். ஏனெனில் கூத்து சமுதாயக் கற்றலைத்தரும் ஒரு பள்ளிக்கூடமாகும். செய்தலினூடாகக் கற்றலும் விழாக்களினூடாகக் கொண்டுவருதலும் இங்கிருக்கும். இதில் ஆற்றுகை மையம் பிரதானமாக இருக்கும். அடிப்புற அரங்க அணுகுமுறை இங்கு முக்கியமானது.

ஊருக்குள் கஷ்டப்பட்டு அக்கஷ்டத்தோடு, மகிழ்ந்து கூத்தாடி வந்தவர்களுக்கு மனக்கசப்பையும் குரோதத்தையும் ஏற்படுத்தும் நிலைமை கூத்தைப் போட்டிக்காக வடிவமைக்கும் போது ஏற்படுகின்றது. கூத்தர் குழுவிற்குள்ளே மனச் சஞ்சலத்தையும் திண்டாட்டத்தையும் ஏற்படுத்துகின்றது. இதனால் முன்னர் விரும்பி கூத்தாடிய நிலை இல்லாது போகும் ஆபத்தான சூழலை ஊருக்குள் கொண்டுவரும் நிலை உருவாகிவிடும்.

கூத்துப் போட்டி முடிவுகள், கூத்தர் குழுக்களுக்கிடையே மனஸ்தாபங்களையும் ஏற்க முடியாமையையும் புரிந்துணர்வின்மையையும் ஏற்படுத்தியுள்ளது.

இது கூத்தரங்கின் சமுதாயம் தழுவிய சூழலைச் சிதைக்கும் நிலைமையினைக் காட்டுகின்றது. குறிப்பாக, ஊருக்குள் கூத்துப் பழகும்போது பழகும் காலங்களிலும் சதங்கையணி விழா, அரங்கேற்ற விழா, வீட்டுக்கு வீடு ஆடும் காலங்களிலும் அருகிலிருக்கும் ஊரவர்கள், நண்பர்கள், சாதிக்காரர்கள், மூத்த கூத்தர்கள், ஆர்வலர்கள் எனப் பலர் வருவதும் கூத்து ஆடும் சூழலில் நின்று அபிப்பிராயங்களைக் கூறி, அதனை வலுப்படுத்துவதும் உறவை விசாரித்து பழைய நினைவுகளை மீட்டிக் கொள்வதும், வாழ்த்துத் தெரிவித்து உற்சாகப்படுத்துவதும் வழமை. இந்தச் சூழல் ‘கூத்து போட்டிக்காக’ வடிவம் பெறும்போது இல்லாது போகின்றது. பழகி போட்டி முடிந்த பின்னரும் சரியான தெரிவின்மையால் ஒருவரையொருவர் பார்க்காது செயற்படுக்கின்றர். மீண்டும் கூத்தாட விரும்பாத நிலையும் வருகின்றது. “வழமையாக கூத்துப் பழகும்போது வருபவர்கள் ஏன் வரவில்லை” என அவ்விடத்தில் கூடியிருப்போர் வினவும்போது கூத்துப் போட்டியின் நிலவரம் பற்றிய உரையாடல் மேலும் வலுப்பெறுவதையும் காணலாம். இதன்மூலம் ஊருக்குள் மனக் கசப்பும் போட்டியால் பழிவாங்கும் குரோதமும் கட்டியெழுப்படும்போது முன்னைய இடையூடாட்டம் (Interaction) குறைகின்றது. போட்டியினூடாக இந்தப் பொருத்தமற்ற சூழலை உருவாக்குவது சிறந்தல்ல.

அத்தோடு, ஊருக்குள் கூத்துப் பழகி அரங்கேற்றி முடிந்ததும் கூத்தர் பற்றியும் ஆடப்பட்ட கூத்துப் பற்றியும் அண்ணாவியின் ஆளுமை பற்றியும் கூடிக் கூடி பேசும் சூழல் நிலவுவது வழமை. குறிப்பாக, பெண்கள், மூத்தோர் எனப் பலரும் சிறப்பாக ஆடியவர்களுக்கு ‘பட்டம் சூட்டி’ கௌரவப்படுத்தி மதிப்பீடு செய்வர். அவ்வேளை கூத்தரிடமும் அவரவரது திறமை பற்றி கூறி விமர்சிக்கப்படுவது இயல்பாகும். இச்செயற்பாடும் போட்டிச் சூழலில் இல்லை.

*கூத்தைப் போட்டிக்காக ஏற்பாடு செய்பவர்கள் ''போட்டியினூடாகவே கூத்து வளர்ச்சியடையும் அதனைப் பேண முடியும்'' எனக் கூறுகின்றனர். இந்த வளர்ச்சி கூத்தர் சமூகத்தினரிடம் வன்முறையை ஏற்படுத்துவதாக உள்ளது. வளர்ச்சியும் பேணுகையும் கூத்தர் சமூகம் சார்ந்தாகவும் அதன் பயில்நிலைக்களம் சார்ந்ததாகவும் இருக்கவேண்டும். அப்போதே நிரந்தரமான வன்முறையற்ற வளர்ச்சியைப் பெறலாம். கூத்துப் புலமை இல்லாத காலனிய மனோபாவத்துடன் செயற்படும் எம்மவர்களின் அதிகாரப் போக்கு கூத்தரை நெருக்கடிக்குள்ளாக்குவதோடு, தாழ்வு மனப்பாங்கினையும் ஏற்படுத்துகின்றது. கூத்தைப் பேண வேண்டும் வளர்க்க வேண்டும் என நினைப்போர் அதன் சமூகச் சூழலுடனும், அதன் பண்பாட்டுச் சூழலுடனும், கூத்தரின் விருப்புடனும் முன்னெடுக்கவேண்டும். அப்போதே காலனிய நீக்கத்துடனான நிலைத்திருக்கும் மாற்றத்தை அடையலாம். இல்லாவிடின் வன்முறையுடன் கூடிய அழவையே அடையமுடியும். இதற்கு கூத்து பயிலப்படும் அடிப்புற அரங்க அனுபவமும், அதன் ஈடுபடும் அவசியமானது.*

*கூத்துப் போட்டியில் இரண்டாம் மூன்றாம் இடங்களுக்கு தள்ளப்பட்ட கூத்தர்களுக்கு மனச் சஞ்சலங்கள், தாக்கங்கள் வருவதோடு, முதலாம் இடத்திற்கு வந்த கூத்தில் ஆடிய கூத்தருக்கும் மற்றய கூத்து நண்பர்களுடன் முகம்கொடுக்க முடியாத மனப்பாங்கு உருவாகின்றது. பொருத்தமற்ற தெரிவால் இந்த நிலை வந்திருக்கின்றமை புலனாகின்றது.*

***3. அண்ணாவியார் ஓரங்கட்டப்படுதல்***

*நவீன நாடகம் போட்டிக்காக வடிவமைக்கப்படும்போது நெறியாளர் புகழாரம் சூட்டப்பட்டு உச்சத்திற்குக் கொண்டுவரப்படுகின்றார். ஆனால், ஆடல் பாடல்களைப் பழக்கி விடிய விடிய மத்தளம் அடிக்கும் அண்ணாவியாரை முன்னிலைப்படுத்தாத நிலை போட்டிச் சூழலில் காணப்படுகின்றது.*

*போட்டிக்காகத் தயாரிக்கப்படும் கூத்தில் அண்ணாவியார் முன்னிலைப்படுத்தப்படுவதில்லை. இது பேராசிரியர் சு.வித்தியானந்தன் கூத்தை செம்மையாக்கம் செய்த காலத்தில் இருந்து வருகின்றது. பாடசாலை மட்டங்களில் தாம் கூத்தாசிரியர் எனக் கூறுவோர் ''கூத்தைத் தானே பழக்கியதால் முதலிடம் வந்தது'' என தமது நவீன அறிவில் நின்று குறிப்பிடுகின்றனர். இதனைக் கூத்துச் செயற்பாட்டிலும் காணலாம். 'உத்தரை புலம்பல்' எனும் கூத்தை பழக்கியவர் விளாவெட்டுவானைச் சேர்ந்த அண்ணாவியார் மா.ஞானசெல்வம் ஆவார். ஆனால், இவர்கள் தாங்களே கூத்தைப் பழக்கினோம். இதனாலே முதலிடம் வந்தது என்று கூறிக்கொள்வதும் நடைமுறையில் உள்ளது.*

*பாரம்பரியக் கூத்தரங்கில் ஆட்டம், பாட்டு, நடிப்பு என்பவற்றைப் பழக்கி விடிய விடிய இடுப்பில் மத்தளத்தைக் கட்டி அடிக்கும் ஆளுமை படைத்தவரும், பல கூத்துக்களை ஆடியதோடு தலைமைக் கூத்தராக (நாடகக்காரனாக) ஆடியவரையுமே ஊர் மக்கள் 'அண்ணாவி' என அழைப்பர். சில வேளைகளில், ஊர் மக்கள் அவ்வாறு 'அண்ணாவி' பட்டம் கொடுத்தாலும் அவரது தொடர் செயற்பாட்டைக் கொண்டே வேறு சிலர் அங்கீகரிப்பது வழக்கம். இவ்வாறு கூத்துக் கள நிலவரம் இருக்கும்போது மத்தள வாசிப்பே தெரியாத ஆட்டமும் பாட்டும் பாரம்பரிய முறைப்படி அறியாதவர்கள் தம்மை அண்ணாவி என அழைக்கப்பட விரும்புவது எந்தளவிற்குச் சாத்தியமாகும்.*

*அண்ணாவியாரே கூத்தின் ஆற்றுகைப் பனுவல் ஆவார். அவர் மத்தளத்தை இடுப்பில் கட்டி விடிய விடிய களரியில் நின்று தமது அறிவு, திறன், நிபுணத்துவங்களை வெளிப்படுத்தும் ஆளுமையானவர். இதனை*

அறியாது, விளங்காது வேறு ஒரு துறை சார்ந்தவரை அண்ணாவியார் என பட்டம் கொடுப்பது குதிரை ஓடி பரீட்சையில் சித்தி அடைய வைப்பதற்கு ஒப்பானது.

அண்ணாவியாரைப் பாமரர், படிப்பறிவில்லாதவர் எனக் கூறி, எழுத்துக்களில் பதிவு செய்து விட்டு, தாமே அண்ணாவி எனப் பெயர் எடுத்துப் பெருமைப்படும் கைங்கரியம் அபத்தமானது. அண்ணாவி எனப் பெயர் எடுப்பதற்குப் பெருமைப்படும் நவீன அதிகாரிகள், உண்மையான அண்ணாவியாரைப் புறந்தள்ளுவது அல்லது சபையில் எடுக்க விரும்பாததன் பொதுப்புத்தி என்ன என்பது சிந்தனைக்குரியதாகும்.

போட்டிக் கூத்துக்களைப் பழக்கும்போது அண்ணாவிமார் ஓரங்கட்டப்படுவது மாத்திரமல்ல கட்டுப்படுத்தப்படும் சூழலும் நிலவுகின்றது. இது அதிகாரிமார் அண்ணாவியாரையும் கூத்தரையும் தமது நவீன அறிவினால் கட்டுப்படுத்தி, தானே பெரியவர் எனக் காட்டிக்கொள்ளும் நிலையைக் கொண்டுவருவதாகவும் அமைகின்றது. இதனையே அண்ணாவியார் மா. ஞானசெல்வம் கூறுவது மனங்கொள்ளத்தக்கது.

> “போட்டிக்குப் பழக்கிய கூத்தில் இருதயநாதன் ஐயா நாடகத்தில் வரும் ஆட்டமும் பாட்டும் போல் வைத்தார். நான் கேட்டேன் வேற தாளக்கட்டு வருகுதே என்று. இது போட்டிக்குப் போற கூத்துத்தானே ஐயா என்று கூறினார். இதன் தாளக்கட்டு சவுப்பு. இவர் நாடகம் பழக்கிறவர்தானே அது அப்படித்தான் வரும். தரமானதாக இல்ல. இப்படித்தான், நான் ஊரில் பழக்கும் கூத்தில் விருத்தம் பாடிய பின்னர் தான் தாளம் வரும். ஆனால், இக்கூத்தில் சேர்க்கப்பட்ட விருத்தத்தில் ஒவ்வொரு வரியையும் பாடிமுடிய ஒவ்வொரு தாளம் ஆடிக்கப்பட்டது” (நேர்காணல், 11.05.2015)

எனக் கூறினார்.

அத்தோடு, அண்ணாவியார் என்பதன் சக்தியும் பொருளும் அவரது ஆளுமையும் அறியாது அதிகாரநிலை நிற்பவர்களையும் கூத்தை நவீன நாடகத்திற்குப் பயன்படுத்துபவர்களையும் அண்ணாவியார் என்று பதிவு செய்வது பொருத்தமற்றது. ‘உத்தரை புலம்பல்’ கூத்து முதலிடம் வந்தபோது அது இருதயநாதன் ஆசிரியரால் பழக்கப்பட்டது என்றும் அவரே அண்ணாவியார் என்றும் ஊருக்குள் பேசப்பட்டதையும் அக்கூத்துக்கு அண்ணாவியாராக இருந்த மா.ஞானசெல்வம் அவர்கள் கவலைப்பட்டதையும் அறிய முடிந்தது. போட்டி ஏற்பாட்டாளர்களும் அவ்வாறு கூறி கட்டமைப்பது அடுத்து குறிப்பிடத்தக்க ஆபத்தான நிலைமையாகும்.

போட்டிகளில் அண்ணாவிமாரை மத்தளம் அடிப்பதற்கும், தரு எடுப்பதற்கும் பயன்படுத்தி விட்டு, தயாரிப்புக்குப் பொறுப்பானவர்களே புகழ்ச்சிக்குரியவராகவும் கௌரவத்திற்குரியவராகவும் கையாளப்படும் சூழலை போட்டிகளின் தொடக்க நிகழ்வின் அறிவிப்பாளரினூடாகக் காணக்கூடியதாக உள்ளது. ‘உத்தரை புலம்பல்’ கூத்தில் விளாவெட்டுவான் ம.ஞானசெல்வம் அண்ணாவியார் பற்றிய எந்த எடுத்துரைப்புகளும் முன்னிலைப்படவில்லை. நவீன கல்வி அதிகாரத்தின் படி, கழகத் தலைவருக்கே அது போய்ச் சேர்கிறது. இது கூத்தைப் போட்டிக்காக ஏற்பாடு செய்யும் அதிகாரிகளுக்கு கூத்தரங்கு பற்றி ஆழ்ந்த அறிவும் புலமைத்துவமும் இல்லை என்பதையே வெளிப்படுத்துகின்றது. அப்படியாயின் கூத்தையும் அதன் சமுதாய இயங்கியல் சூழலையும் கூத்தர்களையும் அறியாதவர்கள் அடிப்புற அரங்கக் களத்திற்குச் சென்று அதில் பரீட்சயமாதல் அவசியமாகும். அப்போதே அதன் உயிர்ப்பும் சிறப்பும் தேவையும் தானாக உணர்த்தப்படும்.

*4. **ஊருக்குள் இடம்பெறும் நெருக்கடிகள்***

*போட்டிச் சூழலில் இளம் கூத்தர் குழு ஆர்வத்துடன் மிகக் கடுமையாகப் பழகி ஊரிலிருந்து போட்டிக்குப் வரும்போது ஊர்மக்கள் பல எதிர்பார்ப்புடன் இருப்பர். உண்மையாகவும் சரியாகவும் செய்தவர்களிடமும் இவ் எதிர்பார்ப்பு அதிகம் உண்டு. ஆனால், பாரம்பரியமாகப் பழகிச் சென்றாலும் சரியான முறையில் தெரிவு செய்யப்படாத நிலை ஏற்பட்டால் குழப்பமடைந்து ஊருக்குள் நுழையும் கூத்தருக்கு வெட்கமும் மன கஷ்ட்டமும் ஏற்படும்.*

*எடுத்துக்காட்டாக, மேற்குறிப்பிட்ட போட்டி நிகழ்விற்கு முனைக்காட்டு கிராமத்திலிருந்து வந்த 'நல்லதங்காள் நாடகம்' கூத்து இரண்டாம் இடத்திற்கும், கன்னங்குடாவில் இருந்து வந்த 'கர்ணன் மோட்சம்' எனும் கூத்து மூன்றாம் இடத்திற்கும் தள்ளப்பட்டது. ஆனால், போட்டிக்கு வந்த கூத்தர்களும் பார்ப்போரும் 'கர்ணன் மோட்சம்' எனும் கூத்தே முதலாம் இடம் வரும் எனும் எண்ணத்துடன் இருந்தனர். ஏனெனில், அதுவே பாரம்பரிய முறைப்படியான பாட்டு, ஆட்டம், நடிப்பு முறைகளையும், நிகழ்த்துகைகளையும் கொண்டிருந்தது.*

*இதனையே, 'நல்லதங்காள் கூத்தில்' ஆடிய கூத்தரும் எதிர்பார்த்தார். ஆனால், நடந்தது வேறு இதனால் கூத்தருக்குள் மாத்திரமல்ல ஊருக்குள்ளும் குழப்பங்கள் ஏற்பட்டது. இதுபற்றி முனைக்காட்டுக் கூத்தர் குறிப்பிடும்போது,*

> *"நாங்கள் நினைத்தோம் 'கர்ணன் மோட்சம்' கூத்துத்தான் முதலாமிடம் வரும் என்றும், எங்கட கூத்து இரண்டாமிடம் வரும் என்றும், ஆனால், நடந்து வேறுநிலை" (கேதீஸ்வரன், மா, நேர்காணல், 27.04.2015)*

*என்றார். ஆனால், முதலிடம் தெரிவு செய்யப்பட்ட கூத்துப் பற்றி அவர் ஒன்றும் தெரிவிக்கவில்லை. ஏனெனில், அது பாரம்பரிய கூத்து முறைமையயில் தயாரிக்கப்பட வில்லை என்பதேயாகும். அதேவேளை, 'கர்ணன் மேட்சம்' எனும் கூத்தில் ஆடிய தி. நித்தீஸ்வரன் எனும் கூத்தர் "முதலாம் இடத்திற்கு தெரிவு செய்யபட்ட கூத்து நவீன முறையில் ஆடப்பட்டது. மற்றக் கூத்துக்கள் மரபுப்படி ஆடப்பட்டன. அதுல எது வந்திருந்தாலும் நாம் ஏற்றுக் கொண்டிருப்போம்" (நேர்காணல், 06.05.2015) என்றார். போட்டி அறிவு கட்டமைத்த சிந்தனைப் பரவல் எவ்வாறு பாரம்பரிய அரங்கை எம்மவர்களால் ஓரங்கட்ட வைத்துள்ளது என்பதை உணரலாம்.*

*அதேவேளை, முதலாம் இடத்திற்கு வரவேண்டிய கூத்தர்கள் பொருத்தமற்ற தீர்ப்பால், இரண்டாம் மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்படும் போது மனக்கசப்பாலும் முடிவை ஏற்றுக்கொள்ள முடியாமையாலும் பரிசில்களைப் பெறாது சென்றுவிடும் நிலைமையும் உருவாகும். போட்டியில் சம்பந்தப்படாத ஊரவர் ஒருவர் பரிசைப் பெற்று சென்றபோது, "ஏன் அவ்வாறு பரிசைப் பெற்று வந்தாய்? நாங்கள் வேண்டாம் என்று கூறி விட்டுத் தானே வந்தோம்" எனக் கோபத்துடன் கூறும் பொருத்தமற்ற சூழலையும் அப்போட்டி ஏற்படுத்தியுள்ளது. இது ஊரின் சுமுகமான சூழலை, அதன் அமைதியை மேலும் குழப்புவதாக அமைகின்றது.*

*ஊருக்குள் பொருத்தமற்ற சூழல் உருவாகியுள்ளதை கூத்தரிடையே நடைபெற்ற உரையாடல்கள்மூலம் மேலும் அவதானிக்க முடிந்தது. இவ்வுரையாடல், 'வாளவீமன் நாடகம்' கூத்து முதலைக்குடாவில் 06.05.2015 அன்று அரங்கேற்றப்பட்டபோது அக்கூத்தைப் பார்க்க வந்த கூத்தர்களால் இடம்பெற்றது.*

*அத்தோடு, இவ்வுரையாடலில் பின்வரும் வினாக்களும் எழுப்பப்பட்டன. "மனசாட்சியும் நேர்மையுமில்லாத நடவடிக்கைக்கு அதன் குழப்பத்திற்கும் யார் பொறுப்புக் கூறுவது?" "நடுவர்களா?" "நிகழ்வை நடத்துவோரா?" என்பதாகும். இந்த நிலை பொருத்தமில்லாத தீர்மானத்தால் உருவாகியதை உணர்த்தியது.*

*ஊருக்குள் கூத்துப் பழகும்போதும் அதன் தொடர் செயற்பாட்டின் போதும் கூட்டாக இணைந்து கொண்டாடுதல், மற்றவரது கருத்தை ஏற்று நடந்து கொள்ளல், ஆடும் கூத்தை மற்றக் கூத்துடன் ஒப்பிட்டுக் கூறுதல், அவ்விடத்திற்குச் சென்று உதவுதல், வலுப்படுத்தல் என்பன இடம்பெறுவது வழமை. இவை போட்டிப் பிரிப்பால் மெல்ல மெல்ல இல்லாதொழிக்கப்படுகின்றன.*

*அவ்வாறே, போட்டிக்குப் பின்னர் கூத்தர்கள் மத்தியில் தோல்வியும் வெற்றியும் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் குழப்பத்தை ஏற்படுத்துகின்றது. ஓர் ஊருக்குள்ளே நண்பர்கள் மத்தியில் மனத் தாக்கங்களும், சந்தேக குணங்களும், பழிவாங்கும் எண்ணமும், வெளிப்படையற்ற தன்மைகளும் வலுப்பெற்றுள்ளது. கொண்டாடுதலுக்குரிய கூத்தை மனிதர்களுக்கிடையே போட்டியாக மாற்றுவது தொடர்பாக சிந்தித்து செயற்படுவது காலத்தின் தேவையாகும்.*

*கணவன் மனைவியரிடையேயும் வாய்த்தர்க்கங்கள் ஏற்படுகின்றன. போட்டிக்காகக் கூத்தைத் தயாரித்துச் சென்ற அண்ணாவியர் ப. கதிர்காமநாதன் குறிப்பிடுவதும் இங்கு மனங்கொள்ளத்தக்கது.*

> *"கூத்துப் போட்டிக்குப்போனதால் எனக்கு ஏச்சிவிழுந்தது. எனது மனைவியும் கூத்துப் பார்க்க வந்திருந்தவ. அவதான் என்னை ஏசினவ. இவங்கட முடிவு நல்லமில்ல. முடிவைச் சரியாகக் கொடுக்கல்ல. நீங்க இனி போட்டிக்குப் போகக்கூடாது என சட்டதிட்டமாகக் கூறித்தாவு" (நேர்காணல், 26.04.2015)*

*எனக் குறிப்பிட்டார். இதனைக் கூத்தரும் உறுதிப்படுத்தினார். "ஆடிய எங்களை விட பார்த்துக் கொணடிருந்தவர்களே பிழையான முடிவு எடுத்தமைக்கு ஏசினர்" (கேதீஸ்வரன், மா, நேர்காணல், 27.04.2015) என அதில் ஆடிய கூத்தர் இருவர் கூறினார். இக்கூத்துக்களைப் பார்த்த பெண்ணொருவர் கூறுவதும் கவனத்தில் கொள்ளத்தக்கது. "ஊருக்குள்ள எவ்வளவு கூத்த நான் பார்த்திருக்கிறன். ஊருக்குள்ள ஆடுற மாதிரி ஆடாத கூத்தைத்தான் முதலிடம் தெரிவு செய்தார்கள்" எனக் கூறினார்.*

*நல்ல நிலையில் சென்று கொண்டிருக்கும் கூத்தரின் மன நிலையைப் போட்டி வந்து தொல்லைப்படுத்தி, குழப்பம் அடைய வைக்கின்றது. இதனால், ஊருக்கும் கூத்து உருவாக்கச் சூழலுக்கும் பொருத்தமற்ற நிலைமை உருவாக்கப்படுகின்றது. இதுபற்றி கூத்தர்கள் குறிப்பிடுவது அறிதலுக்குரியது. "கூத்துப் போட்டிக்கு அறிவிப்பு விடுக்கப்பட்டபோது, நம்ம இந்த முறை போட்டிக்கு கூத்தை கொண்டு போகக் கூடாது. முன்னைய மாதிரி வீண் மனஸ்தாபங்கள் வரும் என்று அச்சுதன் சொன்னவன்" (புவிக்குமார், க, பிரபாகரன், கு, நேர்காணல், 20.04.2015) எனக் கூறுவதிலிருந்து கூத்துப் போட்டியானது தொடர்ந்தும் பொருத்தமற்ற சூழலை கூத்தர் மத்தியில் ஏற்படுத்துவதனை அறியமுடிகின்றது. இது இந்தக் கூத்துப் போட்டிக்குச் செல்லும் முன்னர் பழைய அனுபவங்களை வைத்துக் கூறியது. இந்தக் கூற்று, அவர்கள் போட்டிக்கு போன பின்னர் மீண்டும் தலைதூக்கியுள்ளமை புரிதலுக்குரியதாகும்;.*

*கிராமத்தவரே பலவழிகளில் கஷ்டப்பட்டு கிராமியக் கலைகளை வளர்த்தவர்கள். போட்டிக்காக வடிவமைக்கப்படும்போது கூத்தருக்குள் மனக்கசப்பு, சுமூகமற்ற சூழல் நிலவுகின்றது. கூத்துப்போட்டி*

*முடிந்த பின்னர், ஊருக்குள் அவ்வாறு காணப்பட்டதை புலவர் கி. அருளம்பலம் கூறுவது அவதானத்திற்குரியது. "கூத்துப் போட்டிக்குப் பிறகு மண்முனை மேற்கில் ஒரு கூத்தும் தொடங்கல்ல. காரணம் கூத்தருக்கிடையிலான மனத்தாக்கமாகும். அவ்வாறே, கூத்தை கஷ்டப்பட்டுப் பழக்கி வளர்த்தவர்கள் இருக்க கூத்து ஆடாத ஆட்கள் பரிசுப் பெற்று கௌரவிக்கப்படுகின்றனர்" (நேர்காணல், 26.04.2015) என்றும் கூறினார்.*

*கூத்து உளச்சிகிச்சைக்குரிய சாதனமாதலால் போட்டிச் சூழலில் வந்த குழப்பத்தை கூத்தே தீர்த்துள்ளது. போட்டிக்குப் பின்னரான இந்தப் பொருத்தமற்ற சூழலை நிவர்த்தி செய்ய மீண்டும் ஊருக்குள் கூத்தாடத் தொடங்குவதை அவதானிக்கலாம். 'வீரகுமாரன் நாடகம்' வடமோடிக் கூத்து சட்டம் கொடுத்தல் நிகழ்வு ஒன்று கன்னங்குடாவில் 21.04.2015 நடைபெறுவதற்கு முன்னர் ஊரில் எல்லோரும் சேர்ந்து உரையாடியபோது கூத்துப் போட்டி பற்றி பேசப்பட்டது. அப்போது "இனி நாம் போட்டிக்குப் போய் இப்படியெல்லாம் குழப்பமடையக் கூடாது நாளைக்குச் சட்டம் கொடுப்போம் என முடிவெடுக்கப்பட்டதாக" (நேர்காணல், 20.04.2015) கூத்தர் க. புவிக்குமார் குறிப்பிட்டார். போட்டியால் உருவான குழப்பத்திற்குக் கூத்தினூடாக மருந்து கிடைப்பதையும் உணர்தல் அவசியமாகும்.*

*கூத்தர்களைப் போட்டிக்கு இழுத்து அவர்களது கூத்தரங்கின் தொடர் செயற்பாடுகளையும், சுய ஆளுமைகளையும் வெளிப்படுத்த வேண்டும் எனும் விருப்பையும் இல்லாதொழிக்கும் பொருத்தமற்ற சூழல் உருவாக்கத்தினையும் ஊருக்குள் காணலாம். கூத்துப் போட்டிக்கான நிபந்தனையை வழங்கும் நிறுவனங்களின் கெட்டித்தனம் இதுவாகவே அமைகின்றது.*

***5. ஊடகங்களும் கூத்தரங்கில் முன்னிலை வகிக்கும் கூத்தர்களை வெளிப்படுத்துவதில்லை***

*ஊருக்குள் கூத்தாடி மகிழ்ந்து கொண்டாடினால் அது தொடர்பாக ஊடகங்கள் தெரியப்படுத்துவதும் இல்லை. ஆனால், அறிவின் அதிகார நிலையும் முதலாளித்துவ ஏகாதிபத்திய அனுசரணையுடன் செயற்படும் குட்டி முதலாளிகளும் கூத்தை சமுதாயத்திலிருந்து பிரித்து தமக்கேற்ப பகுத்து ஒரு விற்பனைக்குரிய சரக்குப் பொருளாக வடிவமைத்து அதில் முத்திரை குத்த வேண்டும் என்று செயற்படுபவர்களை முன்னிலைப்படுத்தியே சில ஊடகங்கள் செயற்படுகின்றன.*

*கூத்துப் போட்டி தொடர்பான அறிவிப்பு, போட்டியின் ஆரம்பம், இறுதித் தேர்வு, போட்டியில் வெற்றி பெற்றோர் பற்றிய செய்திகள், ஏற்பாட்டாளர்களின் வேண்டுதலினால் வெற்றி நியூஸ் (Batti News) இல் வெளிவந்தது. கூத்து முடிந்த பின்னர் இப்போட்டியில் பங்குகொண்ட கூத்தர் ஒருவரால், அப்போட்டி தொடர்பாகவும், அதில் கூத்தருக்கு ஏற்பட்ட ஏமாற்றங்கள், மனக்கசப்புக்கள், தெரிவின் பொருத்தமின்மைகள் என்பவை தொடர்பாகவும் எழுதி பிரதேச இணையத்தளத்தினூடாக வெளியிடப்பட்டது. ஆனால், அதனை வெளியிட்டு ஒரு சில மணித்தியாலயத்திற்குள் நீக்கப்பட்டது. பிரதேச மக்கள் நலன் சார்ந்து செயற்படும் இலத்திரனியல் இணையத்தள ஊடகங்கள் கூட இவ்வாறான செயலில் ஈடுபடுவதால் இவ்வூடகத்தினூடாக காத்திரமான விமர்சன வளர்ச்சி எப்படி வரும்? எனும் வினா எழுகின்றது. ஆதிக்க சக்திகளின் கட்டுப்பாட்டினுள் இது செயற்படுக்கின்றதா? எனும் கேள்விகளும் விமர்சனங்களும் கூத்தரிடம் எழுந்தது.*

***கூத்தைக் காட்சிப் பொருளாக்குதல்***

கூத்துப் போட்டிக்காக வடிவமைக்கப்படும் வேளையில் கூத்தர் நுகர்வுகளாகின்றனர். குறிப்பாக, கூத்து ஒரு காட்சிப் பொருளாகவும் விற்பனைப் பண்டமாகவும் கொண்டு வரும்பொழுது கூத்தரும் அவ்வாறு உருவாக்கப்படுகின்றனர்;.

உலகமயமாக்கல் சூழலில் முதலாளித்துவத்தின் இயந்திரமயமாக்கல்களின் உற்பத்தி முகவர்கள் இதனைத் தூண்டி வலுப்படுத்துவது அவர்கள் நலன் சார்ந்ததையே காட்டுகின்றது. இக்கூத்து போட்டிக்குப் பணம் கொடுத்தவர்களுக்குச் சொந்தமாவதோடு, கூத்து நூதனசாலையில் வைக்கப்படும் 'காட்சிப்பொருளாகிவிடும்' நிலையே உருவாகுகின்றது. அதேவேளை கூத்தை இன்று வரையும் செழுமையாக வைத்திருக்கும் கூத்தர்களுக்கு எவ்வித தகுதிப்பாடும் இல்லாது போகின்றது. மேனிலையாக்கம் நவீனப்படுத்தலுக்குரியதாகவும் வருகின்றது. அது சாதியத்தை மட்டு வலுப்படுத்துவதாக இல்லை. கூத்தை நவீனப் படுத்தி மேனிலைக்குக் கொண்டுவரவேண்டும் என்கின்ற செயற்பாடு, உயிரற்ற வெறும் காட்சியாக வடிவமைத்து காட்சிக் கூடங்களில் பூட்டிவைப்பதாகவே அமைகின்றது எனலாம்.

கூத்தர் சுயமாகத் தமது உழைப்பைப் பகிர்ந்து கூத்தாடி மகிழ்வது வழக்கம். தமது திறனை, நிபுணத்துவத்தை அண்ணாவியும் கூத்தரும் பழகும்போது வெளிப்படுத்துவர். போட்டிகள் அவர்களையும் பணம் கொடுத்து போட்டிக்காக கூத்தை வடிவமைப்பவர்களாக உருவாக்குகின்றது. போட்டிக்காகக் கூத்தை நவீனப்படுத்துவது மேனிலையாக்கத்தால் ஏற்படும் சாதிய ஆதிக்கத்தைப் போன்றது. சமஸ்கிருமதமயமாக்கம் தமது பண்பாட்டு மேலாண்மையைப் பண்பாட்டினூடாக மக்கள் பண்பாட்டில் பூடகமாகப் புகுத்திச் சிந்தனையில் பதியவைப்பதைச் செய்கின்றது (சிவசுப்பிரமணியன், 2018). பண்பாட்டு வெளிப்பாட்டில் ஒன்றான கலைவடிவத்தினூடாக மேட்டிமையோர் தமது கருத்தியலைப் புகுத்தித் தம்மைப் பெரிதாக்கும் போக்கு போன்றது போட்டிக்காகக் கூத்தை வடிவமைப்பது அமைகின்றது.

**நடுவர்களின் பொருத்தமின்மை**

போட்டியில் நடுவர்களின் பொருத்தப்பாடு அவசியம். அதேவேளை நடுவர்கள் சரியான முறையில் தீர்மானித்துவிட்டு சென்றாலும், போட்டி நடத்துனர்கள் தமது பலத்தால் தம் சார்பானவர்களுக்கும் தமது போட்டிக் குழுவில் உள்ளவர்களுக்கும் சார்பாக முடிவெடுப்பது போட்டி என்பதற்கே அர்த்தம் இல்லாததாக அமைகின்றது.

"கல்வி அபிவிருத்திச் சங்கம் நடத்திய கூத்துப் போட்டி சில மனப்பதிவுகள்" எனும் தலைப்பிலான அறிக்கையை கன்னங்குடா பருத்திச்சேனை கலைமகள் கலைக்கழகத்தினர் வெளியிட்டனர். இதில் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

> "பாரம்பரிய முறைமைக்கு மாறாக ஆடப்பட்ட கூத்துக்கு முதலிடம் கொடுக்கப்பட்டமைக்குக் காரணம் கல்வி அபிவிருத்திச் சங்கமா? அல்லது இக் கூத்துப் போட்டிக்கு நடுவர்களாகச் செயற்பட்டவர்களா? என்பது பற்றிய விடயம் கூத்தருக்கு ஐயப்பாடாயிருக்கிறது. அதுமட்டுமன்றி, ஏற்பாட்டுக் குழுத் தலைவர் தனது அறிமுக உரையில் உத்தரை புலம்பல் கூத்தின் கதாப்பாத்திரங்களைத் தனக்கு நன்றாகத் தெரியும் என்று புகழ்ந்து குறிப்பிட்டமையா? என்பது எங்களுக்கு கேள்விக்குறியாயுள்ளது" (Batti News, 02.02.2015) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கூற்று நடுவராகக் கடமையாற்றுவோருக்கும் கூத்து நடத்துனருக்கும் நடுநிலையான, பக்கச்சார்பற்ற போக்குடன் செயற்படுவது பிரதானது என்பதைக்காட்டுகின்றது.

**போட்டிக்கான இக்கூத்தாற்றுகையில் நடைபெற்ற சாதகங்கள்**

இவ்வாறான கூத்துப் போட்டிகளினூடாக கூத்தரங்கிற்குத் தேவையான பொருத்தமான சூழலும் நிலவுகின்றது. பெண்கள் கூத்தாடும் சூழலை இப்போட்டி கொணர்ந்தது. கூத்து நிகழ்த்தப்படும் திறந்த வெளியான களரியும், கூத்தரங்கின் சூழலும், அதன் உணர்வும் இளம் பெண்களுக்கும் அதனைப் பார்த்த சகபாடிகளுக்கும் கொடுக்கப்பட்டது.

கல்வி அபிவிருத்தி நிறுவனத்தில் கல்வி கற்ற பெண் பிள்ளைகள் பெண் பாத்திரங்களைத் தாங்கி ஆடியமை மிக நேர்த்தியாகக் காணப்பட்டது. முனைக்காட்டைச் சேர்ந்த கேதீஸ் அண்ணாவியாராகச் செயற்பட்டு 'நல்லதங்காள்' வடமோடிக் கூத்து ஆடப்பட்டது. இது போட்டிக்கானதாக இருக்கவில்லை. 'நல்லதங்காள்' எனும் கூத்து விழாவின் தொடக்கக் கூத்தாக தயாரிக்கப்பட்டு களரியேற்றப்பட்டமை சிறப்பம்சமாகும். பெண் கூத்தர்கள் அனைவரும் விரும்பி ஆற்றுகையில் இணைக்கப்பட்டமை கூத்தின் வலுப்படுத்தலுக்கான உந்துதலைக் கொடுத்தது. அதேவேளை, போட்டிக்காக வந்த இரண்டு கூத்துக்களில் பிரதான பாத்திரத்திற்கு (கூத்திற்கு) பெண்கள் ஆடியுள்ளனர். மங்கிகட்டு கிராமத்திலிருந்து கொண்டுவரப்பட்ட கூத்திலும், கன்னங்குடாக் கிராமத்திலிருந்து கொண்டுவரப்பட்ட கூத்திலும் இதனைக் காணமுடிந்தது.

அத்தோடு, தோரணத்துடனான வட்டக்களரி அமைப்பைச் செய்து செயற்படுத்தியமை முக்கிய அம்சமாகும். 'வட்டக்களரி' கூத்தரங்கிற்கு உயிர்த்துவத்தைத் தருவது ஆகும். கூத்துக்கு, அதன் வாழ்தலுக்கு களரியின் திறந்த வெளியே பிரதானம். களரியினைச் சிறப்புற அமைத்து தோரணத்தை அதன் நுழைவாயிலில் கட்டியமை கட்டிடக் கலையின் நிபுணத்துவத்தைக் காட்டுவதாக அமைந்திருந்தது. அதிலுள்ள அலங்கார வேலைப்பாடுகளையும், அளவுத் திட்டங்களையும் இளம் தலைமுறையினருக்குச் செய்து கற்க வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைமை ஆரம்ப காலத்தில் பாரம்பரிய கூத்தரங்கிலிருந்து பிற்காலத்தில் விடுபட்டாலும் ஊர் கூத்தர்களுடன் உரையாடி மீளவும் வெளிக்கொண்டு வந்தமைக்கான வரலாறும் ஒன்று உண்டு. மூன்றாவது கண் உள்ளூர் அறிவுத் திறன் செயற்பாட்டுக் குழு நண்பர்கள் வட்டத்திலும், ஊர்களிலும், பல்கலைக்கழகத்திலும், பிரதேச செயலகங்களிலும் தொடர் உரையாடல் மூலம் புரிய வைத்து வலுப்படுத்தப்பட்டமையே ஆகும். இது அடிப்புற அரங்க அனுபவ வெளிப்பாட்டின் தன்மையைக் காட்டுகின்றது.

கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறை பாரம்பரிய அரங்க விழாவை மாமாங்கத்தில் 2012ஆம் ஆண்டில்; செய்தபோது தோரண நுழைவாயிலுடன் களரி கட்டப்பட்டு அதனை அறிய வைக்கும், பார்த்து பரீட்சயமாக்கும் சூழலைக் கொடுத்தது.

பின்னர் தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சி அம்பாறை, குளியாப்பிட்டி ஆகிய இடங்களில் நடாத்தியபோது தோரண வாயிலுடனான களரி கட்டி கூத்தாடப்பட்டது. இது முயையே 2012, 2013 காலத்தில் நடைபெற்றது. பல்கலைக்கழக மாணவர்கள், இவ்வாய்வாளர் ஆகியோர் ஊரில் களரி கட்டும் நிபுணத்துவம் உடையவர்களுடன் இணைந்து செயற்பட்டனர். இவ்வாய்வாளர் 2013, 2014, 2015களில்

*மாமாங்கத்தில் நடைபெற்ற பாரம்பரிய அரங்க விழாவிலும் கிழக்குப்பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அலங்காரரூபன் தென்மோடிக் கூத்து அரங்கேற்ற விழாவிலும், இந்து கலாசார திணைக்களத்தின் ஏற்பாட்டில் 2013ஆம் ஆண்டில் திருகோணமலையில் நடைபெற்ற 'மடை' நிகழ்விலும், குளியாப்பிட்டியில் நடைபெற்ற தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சியிலும் களரி, தோரணம் என்பவற்றைக் கட்டுவதற்குப் பொறுப்பெடுத்து பங்குகொண்டு கட்டியிருந்தார். அத்தோடு, அதற்கான இணைப்பாக்கத்தையும் பொறுப்ப்ும் செய்துள்ளார் என்பதும் கவனதிற்குரியது.*

*மேலும், பாரம்பரிய அரங்க நிகழ்வுகளின் ஆரம்ப விழாக்கள் களரியை மையப்படுத்தியதாக தற்காலத்தில் இடம்பெறுகின்றன. அடைக்கப்பட்ட இடத்தில் ஆதிக்க மையம் இயல்பாக நிறைந்திருப்பதை நாம் அறிந்ததே. இது பொருத்தமானதா? என்பது உரையாடலுக்குரியது. 'கல்வி அபிவிருத்தி நிறுவனத்தின்' கூத்துப் போட்டியும் களரியை மையமாகக் கொண்டு நடைபெற்றமை சிறப்பம்சமாகும்.*

**கூத்தரங்கை வலுப்படுத்தலுக்கான பரிந்துரைகள்**

*கூத்தை வளர்ச்சியடையவைக்க வேண்டும் அல்லது பேண வேண்டும் அல்லது கூத்தை வலுப்படுத்த வேண்டும் எனச் செயற்படும் எம்மவர்கள் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரியவர்கள். சமுதாய இணைவைப் பிரதானமாகக் கொண்ட கூத்தை அதன் மக்களின் வாழ்வியலுடன் அதன் மையம் நின்று அடிப்புறத்தில் செயற்படுத்தும்போதே அது கூத்தர் சமுதாயத்திற்கும் கூத்திற்கும் அவர்கள் ஒன்றிணைவதற்கு வழிவகுக்கும். சமகாலச் சமுதாயத் தேவையும் அதுவேயாகும். ஆரம்ப காலங்களில் அவ்வாறு செயற்படுத்தப்பட்ட முறைமைகளை எடுத்துக்காட்டாகக் கொண்டு பரிந்துரைகளைப் பின்வருமாறு அணுகலாம்.*

1) *அடிப்புற அரங்க அனுபவத்துடன் கூத்தைப் போட்டியாக அல்லாது விழாவாக நிகழ்த்துவது சாலச் சிறந்ததாகும். அப்போதே அது ஊருக்குள் மகிழ்வாக ஆடப்பட்டது போல் வலுவுடையதாக அமையும். கூத்தரும் அண்ணாவிமாரும் அவ்வூர் மக்களும் முதலிடம் பெறுவர். கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையினர் 2012ஆம் ஆண்டில் இருந்து மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் திருவிழாவில் 'பாரம்பரிய அரங்க விழாவும் காட்சிக் கூடமும்' எனும் நிகழ்வை நடாத்தி வருகின்றனர். இது சிறந்ததொரு முறைமை ஆகவும் மாதிரி (Model) ஆகவும் உள்ளது. இதில் மூன்று நாளும் முழு இரவுக்கூத்து நகர மக்களை ஒன்றிணைக்கக் கூடியவாறு நடைபெறுகின்றது. அதேவேளை மாலை நான்கு மணி தொடக்கம் எட்டு மணிவரை இன்னுமொரு கூத்து நிகழ்வு நடாத்தப்படுகின்றது. இதனைப் பார்க்கும் மக்கள் முன்னைய நினைவுகளை மீட்டுப்பார்த்தல், உறவை விசாரித்தல், கொண்டாடி மகிழ்தல், ஆறுதலடைதல், சிறுவர்கள் ஓடி விளையாடுதல், விடுப்பட்டிருந்த இடத்தில் கூத்தாடத் தூண்டுதல் என்பன ஏற்படுவதோடு, கூத்தரின் ஆற்றலை இன்னுமொரு சமுதாயத்திற்கு வெளிப்படுத்தும் களமாகவும் அமைகின்றது. எனவே, போட்டியாக அன்றி விழாவாக நடாத்துதல் கூத்தரங்கின் வலுப்படுத்தலுக்கு வழியமைப்பதோடு, உலகமயமாக்கலை வெல்லுவதற்கான செயற்பாடாகவும் அமையும். பல்வகைமைகளை மதிப்பதாகவும் இருக்கும்.*
2) *கூத்தை ஊருக்குள் பழகுவதற்கு துணைபுரிவதும், முன்னர் ஆடப்பட்ட இடங்களில் விடுபட்டதை அறிந்து வலுப்படுத்துவதும். போட்டிக்காகச் செலவு செய்யப்படும் பணம் இரண்டு இலட்சம் எனின், எட்டு ஊரில் எட்டுக் கூத்துக்களை ஆடவைக்கலாம். ஒரு கூத்திற்கு இருபத்தையாயிரம் கொடுப்பதாக நிதிவழங்குனர் முடிவெடுத்து, முதலில் பத்துஆயிரத்தைக் கொடுத்து கூத்தை ஊரை*

*அல்லது நகரத்தை மையமாகக் கொண்டு பழக்கவைத்து சதங்கையணிவிழா முடிந்ததும், இன்னுமொரு ஐந்தாயிரத்தைக் கொடுக்கலாம். பின்னர் அரங்கேற்ற விழா நடாத்திக் காட்டினால், மீதி பத்தாயிரம் ரூபா தரப்படும் என அறிவுறுத்தலைக் கொடுக்கலாம். இவ்வாறு ஊருக்குள் உருவான கூத்துக்களைப் பெருவிழாவாகவும், வெவ்வேறு இடங்களில் நடாத்தலாம். நாடத்தி முடிய மீதிப் பணத்தைக் கொடுக்கலாம். இது தொடர் செயற்பாட்டுடன் அதே இயங்கியல் வெளியில் ஆடவைப்பதை வலுப்படுத்துவதாகவும் இளம் தலைமுறைக்கு கூத்தரங்கச் சூழலைக் கொடுப்பதாகவும் அமையும்.*

3) *அடிப்புறத்தில் அரங்கை வலுப்படுத்துவதில் 'அடிப்புறத்தில் இருந்து அடிப்புறத்திற்கு' (Bottom to Bottom) எனும் எண்ணக்கருவும் குறிப்பிடத்தக்கது. மக்களிடம் சென்று கற்று அவதானித்து, அனுபவத்தைப் பெற்று, ஈடுபட்டு மீண்டும் அதன் மேம்பாட்டிற்காக அந்த அரங்கில் தம்மை ஈடுபடுத்தி, வலுப்படுத்தச் செயற்படுத்துவது இதன் பிரதான கருத்தியலாகும். 2019, 2020ஆம் ஆண்டுகளில் அம்பிளாந்துறையில் அடிப்புற அரங்கச் செயற்பாட்டுப் பேரவையால் நடத்தப்பட்ட கூத்துச் செயற்பாடும், அதன் ஒருங்கிணைப்பு முறையும், அதன் மாதிரியும் குறிப்பிடத்தக்கதாகும். இராம நாடகம் வடமோடிக் கூத்து இச்செயற்பாட்டில் ஆடப்பட்ட கூத்தாகும். இதன்போது மீண்டும் கூத்தை நினைவுபடுத்தல், பிற ஊரில் கூத்தை ஆடுவதற்கு ஊக்குவித்தல், ஆற்றலைக் கொண்டாட வைத்தல் போன்றவற்றை ஏற்படுத்தியது. இச்செயல்பாட்டை இவ்வாய்வாளரே முன்னெடுத்தார்.*
4) *'ஆற்றுகைமையக் கற்றல்' (Performance centered learning) எனும் முறைமை மூலமான செயற்பாடும் அதன் உத்தியும். இந்த முறைமையை இவ்வாய்வாளர் 2011ஆம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையில் கூத்துப் பாடத்தைக் கற்பிக்கும்போது அறிமுகப்படுத்தினார். இதனூடாக கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் விரிவுரையாளர்களும் பாடத்திட்டத்தில் உள்ள வடமோடி, தென்மோடிக் கூத்துக்களை ஊருக்குள் பழகி ஆடுவதையும், அதனால் சமுதாயம் இணைதல், வாழ்தல், மகிழ்தல், பழைய நினைவுகளை மீட்டல், பல்கலைக்கழக மாணவர்கள் கற்றுக்கொள்ளல் இடம்பெற்றமையையும் எடுத்துக்காட்டலாம். 2011ஆம் ஆண்டில் 'கண்டியரசன்' தென்மோடிக் கூத்து வே.தம்பிமுத்து, பா.கமலநாதன் அண்ணாவிமாராலும், 2015ஆம் ஆண்டில் 'அலங்காரரூபன்' தென்மோடிக் கூத்து வே.தம்பிமுத்து அண்ணாவியாராலும், 2017ஆம் ஆண்டு வீரகுமாரன் நாடகம் வடமோடிக் கூத்து வே.தம்பிமுத்து அண்ணாவியாராலும், 2019ஆம் ஆண்டு நொண்டி நாடகம் தென்மோடிக் கூத்து ப.கதிர்காமநாதன் அண்ணாவியாராலும் ஆற்றுகைமையக் கற்றல் எண்ணக்கருவில் பயிற்றப்பட்ட கூத்துக்களாகும். இவை பல்கலைக்கழகச் சமூகத்திற்காகப் பழக்கியமை குறிப்பிடத்தக்கது.*

*மேலும், வசந்தன் கூத்தைச் சிறுவர்களுக்குப் புதிதாகப் பயிற்றுவித்து முன்னெடுத்தமை தொடர்பாக ச. துஷ்யந்தி குறிப்பிடுவதும் கவனத்திற்குரியது.*

> *"வசந்தன் கூத்தினைப் பாரம்பரிய முறையில் பயின்ற சிறுவர்கள் அக்கலையின் மூலம் சமூகத்துடனான உரையாடலை மேற்கொள்வதற்கும், உறவை பேணுவதற்கும், தாம் கற்ற கலையை பிரயோகிப்பதற்கும் முயற்சி செய்துள்ளனர். தாம் வாழும் சமூகத்தில் காணப்படும் சமூகப் பிரச்சினைகளை அவர்களாகவே அடையாளம் கண்டு வசந்தன் மெட்டினை*

*அடியொட்டிய பாடல், ஆடல் மூலம் வெளிப்படுத்தியுள்ளமையினை இங்கு குறிப்பிடலாம்" (2022, 131).*

*எனவே, கூத்தரங்கு சமகாலத்தில் தனியன்களாக்கப்பட்ட மனிதர்களை செயற்பாட்டினூடாக ஒன்றிணைக்கும் கருவியாக உள்ளது. கூத்தரங்கின் தொடர் செயற்பாடும் அதன் வெளியும் இதனைச் செய்கின்றது. இன்றைய உலகமயமாக்கல் சூழல் காலனியவாதிகளின் பிரித்தாளும் தந்திரத்தைச் சிந்தனையில் நின்று வலுப்படுத்துகின்றது. கூட்டாக இணைந்து செயற்படவிடாது தனி மனிதர்களாக்கப்படுவது இதன் மறைமுகமான அம்சமாகும். இயந்திர உற்பத்தியை அறிமுகப்படுத்தி அதன் பொருட்களை விற்கும் சந்தைகளை வேறு நாடுகளில் விஸ்தரிக்கும் முதலாளிகள் எந்த வகையிலாவது கூடிவாழும், கூட்டாகப் செயற்படும் பாரம்பரிய சம்பிரதாயங்களை அனுமதிப்பதில்லை. அது உடனடியாக வியாபாரமாக்கப்படுகின்றது. இவ்வாறு தனிமைப்படுத்தல் ஆதிக்க எண்ணக்கருவாகும்.*

*இதனை ஆபிரிக்க நாவலாசிரியர் சினுவா அச்சுபேயன் 'சிதைவுகள் நாவலில் குறிப்பிட்டதை, சி.ஜெயசங்கர் எடுத்தாண்டதைக் கொண்டு நோக்குவது இவ்விடத்தில் பொருத்தமாகும். "எங்களைப் பிணைத்திருந்த கட்டுக்களில் கத்தியை வைத்தார்கள். கட்டுக்கள் அறுந்தன. நாங்கள் சிதறுண்டு போனோம்" (2011) என்பதாகும். உலகமயமாக்கலின் கெட்டித்தனமும் அதுவாகும். இதனைவிட கூத்து நவீன நாடகத்திற்குள் மறைகின்றது என்பதை க. ரதிதரன் குறிப்பிடுவதும் கவனத்திற்குரியது. "கூத்தைப் பாதுகாக்கும் செயன்முறை என்பதற்கு அப்பால் கூத்தின் நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது என்பதுதான் உண்மையாகும். அதேநேரம் அந்தக் கூத்து நவீன நாடகத்தினுள் மறைந்து விடுகின்றது" (2019, 48) எனும் கருத்தாக்கம் போட்டிக்காகக் கூத்தைத் தயாரிக்கும் போதும் நடக்கின்றது எனலாம்.*

**முடிவுரை**

*கூத்துப் போட்டிக்குள் இழுக்கப்படுவதால் கூத்தரங்கிலும் கூத்துக் கலைஞர்களிடமும், ஊர் மக்களிடமும்; சிக்கல்களையும் நெருக்கடிகளையும் ஏற்படுத்துகின்றது. இது நிதி நிறுவனங்களின் தேவைக்கேற்ப உருவாவதாகவும், ஆதிக்க நிலைமையின் போக்கையும் அதன் பார்வையின் கட்டுருவாக்கத்தையும் வலுப்படுத்துவதாகவும் உள்ளது. இதனால், கூத்தர்கள் பல சவால்களை எதிர்கொள்வதாகவும், தமது ஊரில் கூத்தாடும்போது அவர்களுக்கான தேவைகளை நிறைவேற்றி வாழும் தன்மை அற்றுப்போவதைத் தூண்டுவதாகவும் அமைகின்றது. குறிப்பாக, கூத்தைப் பொருத்தமற்ற முறையில் வடிவமைக்க வழிப்படுத்தப்படுதல், கூத்தில் ஏற்படும் மாற்றங்கள் ஏற்படுதல், கூத்தருக்குள் மனச்சஞ்சலங்கள் ஏற்படுதல், அண்ணாவியார் ஓரங்கட்டப்படுதல், ஊருக்குள் குழப்பம் ஏற்படல், கூத்தை நுகர்வுப் பண்டமாக்குதல் (காட்சிப் பொருளாக்குதல்), தனிநபருக்குரியதாகுதல் என்பன அதில் குறிப்பிடத்தக்கன.*

*அத்தோடு, சட்டம் கொடுத்து வீட்டுக்கு வீடு ஆடும் வரையான தொடர் செயற்பாட்டின் போது கொண்டாடி மகிழ்தல், இன்புறுதல் காணப்படுவதோடு முன்னைய விடயங்களை நினைவுபடுத்தல், கூட்டாக இணைந்து செயற்படுதல், சுயமாக முகாமை செய்தல், கூத்தர்களின் ஆற்றல், திறன், நிபுணத்துவம் என்பனவற்றை வெளிப்படுத்தல் என்பன நிலவுவது வழக்கம். இவை போட்டிக்காக வடிவமைக்கும்போது அவை விடுபடுவதோடு, கூத்தரங்கின் முழுப் பரிமாணத்தையும் மாற்றுகின்றது என்பதும் மனங்கொள்ளத்தக்கதாகும். போட்டிகளின் போது அதிதிகள் உரையாற்றுகையில் தாம் போட்டி வைப்பது அருகிவிட்ட கூத்தை உயிர்ப்பிப்பதற்கும் பேணுவதற்கும் என்று பொருத்தமற்ற முறையில்*

*பேசுகின்றனர். கூத்தரங்கின் இயங்கியல் வெளி, அதன் இயல்புநிலை அறியாதவர்களே அவ்வாறு பேசுகின்றமை புலப்படுகின்றது. ஏனெனில், அதிகாரிகளுக்கு கூத்துப் பற்றி அறிதலும் உணர்வும் இல்லை என்பதைக் காட்டுகின்றது.*

*எனவே, இன்றைய உலகமயமாக்கல் சூழல் நவீன அறிவின் பரவலாக்கத்தால் பாரம்பரியத்தை உலகமயமாக்குவதற்கு பல திட்டங்களை முன்னெடுக்கின்றது. அது தேவையாகினும், கூத்து வாழும் சூழலுடன் நின்று வலுப்படுத்தி முன்னெடுப்பது அவசியமாகும். கூத்தைப் போட்டிக்காக வடிவமைத்து அதன் உயிர்ப்பை இழக்கச்செய்து கூத்தரிடையே குழப்பத்தை ஏற்படுத்துவது ஆபத்தானது என்பதை அறியாலம். காலனிய நீக்க செயற்பாட்டாளர்கள் இவ்வாறான பாரம்பரிய அரங்கையும் கிராமியக் கலைவடிவங்களையும் பயன்படுத்துகின்றவற்றை அறிந்து செயற்படுதல் சாலச்சிறந்ததாகும். பாரம்பரியக் கலை வடிவங்களில் செயற்படுவோர் மிக அவதானத்துடன் இருத்தல் அவசியம் என்பதை கலைகளின் போட்டிச்சூழல் உணர்த்துகின்றது.*

***உசாத்துணைகள்***


- *ஆல்வரஸ், கி. (2009). அறிவியல் வளர்;ச்சி – வன்முறை நவீனமயமாக்கலுக்கு எதிரான*
    - *எழுச்சி.(மொழிபெயர்ப்பு). இரா. நடராசன். பயணி வெளியீட்டகம். சென்னை.*
- *சுந்தரம்பிள்ளை, செ. (2000). வடஇலங்கை நாட்டார் அரங்கு. குமரன் புத்தக இல்லம். கொழும்பு – சென்னை.*
- *சிவசுப்பிரமணியன், ஆ. (2018). அடித்தள மக்கள் வரலாறு. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். சென்னை.*
- *துஷ்யந்தி, ச. (2020). "வசந்தன் கூத்து ஆற்றுகை மரபும் பல்நிலை சமத்துவமும்",*
    - *(தொகுப்பு), சு. சந்திரகுமார். ஆற்றுகையும் ஆற்றுகை மையச் செயற்பாடுகளும். குமரன் புத்தக இல்லம். கொழும்பு – சென்னை.*
- *ஜெயசங்கர், சி., (2011). கூத்து மீளுருவாக்கம். கருத்துப் பட்டறை. மதுரை.*
- *மௌனகுரு, சி. (1998). மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள். விபுலம் வெளியீடு. மட்டக்களப்பு.இலங்கை.*
- *ரதிதரன், க. (2019). "பண்பாட்டு மேம்பாட்டிற்கான கலைகள் இருப்பும் எதிர்பார்ப்பும்", வடமாகாண*
    - *ஆய்வரங்கின் கட்டுரைத் தொகுப்பு.*
- **நேர்கண்டோர் விபரம்**
- *அருளம்பலம், கி. வயது 52. கூலி. கூத்தெழுதும் புலவர். பருத்திச்சேனை. 26.04.2015.*
- *கதிர்காமநாதன், ப. வயது 45. வட்டவிதானை. அண்ணாவியார். 9ஆம் வட்டாரம், கொக்கட்டிச்சோலை.*
    - *26.04.2015.*
- *கேதீஸ்வரன், மா. வயது 32. கூத்தர். முனைக்காடு, 20.04.2015. 27.04.2015.*
- *ஞானசெல்வம், ம. வயது 69. அண்ணாவியார். விளாவட்டுவான். 11.05.2015.*
- *பிரபாகரன், கு. வயது 37, ஆசிரியர், கூத்தர், கன்னங்குடா. 20.04.2015, 26.04.2015.*
- *புவிக்குமார், க. வயது 28. பட்டதாரி. கூத்தர். ஏடுபார்ப்பவர். பருத்திச்சேனை. 20.04.2015.*
- *நித்தீஸ்வரன், தி. வயது 26. கூத்தர். பருத்திச்சேனை. 06.05.2015.*


***இணையத் தள முகவரி***


- *கௌரீஸ்வரன், து. 'கல்வி அபிவிருத்திச் சங்கம் (EDS) நடாத்திய கூத்துப் போட்டி – சில மனப்பதிவுகள்'. வெற்றி நியுஸ் (Batti News). 02.02.2015.*